38

6 - NOV 1933

/38

தொகுதி 12.] 1933ஸ் செப்டம்பர் மீ [பகுதி 8.

மனமோகினி

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த விஜயம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேராவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 7-பாகம் விலை ரூபா 13-14-0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது யக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் ...றந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான ...டக்கையும், ஊக்கமு முடையவனாயிருந்தால், அவன் தான் கோரிய ...ரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

ராஜேஸ்வரி, விருந்து மண்டபத்தில் அவசரம் அவசர
மாகவும் மெதுவாகவும் மோகனசுந்தரத்தினிடம் கூறிய விஷ
யம் நேயர்கள் ஞாபகத்தில் இருக்குமென்றே நம்புகிறோம்
அதாவது மறுநாள் பகல் சாப்பாடானதும் தன்னை அவன்
சுந்தரவிலாச மாளிகையின் தோட்டத்தில் தனியான இடத்
தில் சந்திக்க வேண்டுமென்பதே. ஆனால் மறுநாள்பகல் தியாக
ராஜனும் மோகனசுந்தரத்தைவிட்டுப் பிரியாமல் அவனுடனே
யே இருந்ததால் அவ்விடம் செல்ல அவனால் முடியவில்லை.
அன்று தியாகராஜன் தன் ஆளிடம் ராஜேஸ்வரிக்கு ஒரு
கடிதம் அனுப்பித் தான் தன் நண்பனுடன் இருக்கவேண்டி
யிருப்பதால் அவள் வீட்டுக்கு வரமுடியவில்லை என்று தெரி
வித்திருந்தான். அதைக்கொண்டே அவளும், தான் கோரிய
படி மோகனசுந்தரம் தன்னைச் சந்திக்க இயலாது என்பதை
யும் தெரிந்துகொண்டுவிட்டாள். அதனால் அவள் சிறிது வருத்
தமும் அடைந்தாள். ஆயினும் அவள் சாப்பாடெல்லாம்
முடிந்தபிறகு பகலில் தோட்டத்தில்போய் உலாவினாள் மோக
னம் எப்படியாவது சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு
அங்கு வந்துவிடலாமென்னும் நம்பிக்கையுடனேயே அவள்
அவ்வாறு தன்னந் தனியளாக உலாவினாள். காலங்கழிந்ததே
யொழிய அவளுடையமனம் மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கும்
ஆடவன் வரக்காணோம் அன்றுமுழுவதும் அவ்வாறே ஏமாற்
றத்திலும் வருத்தத்திலும் கழிந்ததேயொழிய மோகனம்
அவளைச் சந்திக்க முயன்றானில்லை. மறுநாளாவது தவறாமல்
அவன் வருவானென்றும் தியாகராஜன் ஏதேனும் வேலை
யாகப் போய்விடலாமென்றும் அவள் கருதினாளேயொழிய
அவளை மோகனம் சந்திக்கக்கூடாதென யோசனை சொல்லப்
பட்டிருப்பதோ அல்லது மிக அவசரமாக மோகனம் கிருஷ்ண
கிரியைவிட்டுப் புறப்படுகிறான் என்பதோ அவளுக்குத் தெரி

186584

யாது. அவள் எல்லாம் தன் விருப்பப்படிதான் நடக்கும் என்று நம்பியிருந்தாள்.

விருந்து நடந்த தினத்துக்கு இரண்டாவது நாள் காலையில் தான் ராஜேஸ்வரி அவ்வாறு நினைத்தாள். அன்று காலை தான் மோகனமும் இரத்தினபுரிக்குப் புறப்பட்டுவிட்டான். ஆனால் அதையறியாத ராஜேஸ்வரி அன்றைய தினமாவது மோகனம் எப்படியாவது தன்னைச் சந்திக்க வருவானென நினைத்துப் பகல் ஒருமணி சுமாருக்கு மிக ஆவலுடன் தன் மாளிகையின் தோட்டத்தின் ஒரு மூலையில் தனியாக உலாவிக்கொண்டிருந்தாள். அவன் வரக்காணோம். ஆனால் சொற்பநேரத்துக்கெல்லாம் யாரோ ஒருஆடவன் வருவதாகத் தெரிந்தது. மோகனம்தான் வருகிறானென நினைத்து மிக ஆவலுடன் எதிர்கொண்டாள். ஆனால் வந்தவன் மோகனமல்ல, தியாகராஜன் என்று தெரிந்ததும் அவள் சிறிது ஏமாற்றமடைந்தாளென்றாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் அவனை, அதாவது தன்னை விரைவில் விவாகம் செய்துகொள்ளப்போகும் தியாகராஜனை மிக்க ஆவலுடன் வரவேற்றாள். அவனும் அவளைத் தன் மார்புறத் தழுவிக் கொண்டே, 'கண்மணி! இன்றையதினமும் நான் வரமுடியாதென்று சொல்லிக் கடிதம் எழுதிவிடுவேன் என்று எதிர் பார்த்தாயோ?' என்று கேட்டான். அதற்கு அவள், 'இல்லவே இல்லை. ஒருநாள் வாவிட்டாலும் இரண்டாவது நாளும் வாவில்லையென்றால் அது மன்னிக்கக்கூடிய காரியமாகுமா? ஒரு விருந்தாளி வந்திருக்கிறான் என்பதற்காக மரியாதை செய்யவேண்டியது தான். ஆனால் அதற்காக ஒரு காதலியை அடியோடு மறந்துவிடமுடியுமா?' என்று பரிவுடன் கேட்டுக் கொண்ட அன்பான பார்வையால் அவனை உற்று நோக்கினாள்.

அப்போது தியாகராஜன், 'ராஜேஸ்வரி! இன்று மோகனம் என் வீட்டிலேயே தங்கியிருந்தால் கூட நான் எப்படியாவது அவனை ஏமாற்றி இரண்டொரு மணிநேர சாவகாசத்தைக் கழிக்க இவ்விடம் வந்திருப்பேன்! என்றதும் அவள் ஆத்திரத்துடன், 'ஓ, அப்படியானால், உன்னுடைய சிநேகிதன் ஊருக்குப் போய்விட்டான் போலும்; என்று கேட்டாள். ஆனால் மனதில்மட்டும் அவன் ஊருக்குப்போவதாகச் சொல்லி எங்கேனும் மறைந்திருந்து தன்னைவந்து காண்பான் என நினைத்து மனம் பூரித்தாள். தியாகராஜனும், 'ஆம், அவன் இரத்தினபுரிக்குப் புறப்பட்டுவிட்டான். மிதுனபுரிவரை நான் என் வண்டியைத்தான் அனுப்பினேன். பிறகு அவன் ரயிலில் பிரயாணம் செய்கிறான்' என்றான். அதற்கு அவள், 'நீ உன் நண்பனை அவ்வளவு விரைவில் இழந்துவிட்டாயா?'' என்று கேட்டாள். தியாகராஜன், 'அவன் தன் பெற்றோர்களைக் காண மிக ஆவலுடையவனாக இருந்தான். அவன் சமீபத்தில்தான் தன் பெற்றோர்கள் இருக்கின்றார் எனக் கண்டுபிடித்ததால் அவர்களை விட்டுப்பிரிந்திருக்க அவன் இசையாததில் ஆச்சர்யமொன்றுமில்லை, அது இருக்கட்டும். அவனைப் பற்றி உன்னுடைய அபிப்பிராயம் என்ன என்பதை நீ அறிவிக்கவே இல்லையே, அவன் நல்ல இனிய குணதிசயமுடைய வாலிபனல்லவா?' என்று கேட்டான். அதற்கு அவள், 'ஆம்; அவன் கள்ளங் கபடமற்றவன். ஒரு குழந்தை என்றே அவனைச் சொல்லவேண்டும். நான் அந்த விருந்து மண்டபத்தில் இருமுறை அவனுடன் நடனம்செய்தேனல்லவா? அவ்வளவு தானே. ஆதலால் அவனைப் பற்றி அதிகமாக ஒன்றும் கூற என்னால் முடியவில்லை' என்றாள். உடனே அவன், 'அப்படியல்ல, ஒரு ஆளைப் பார்த்த மாத்திரத்தில் அவனது முகத்தைக்கொண்டே அவன் குணதிசயம் இன்னவிதமாக இருக்கலாம் என்று தெரிந்துகொண்டு விடலா மல்லவா? என் சம்

பந்தப்பட்டவரையில் நான் அவனைத் தாராள நோக்கமுடைய கண்ணியமான வாலிபன் என்றே கருதுகிறேன். நேற்றுகூட நாங்கள் பாக்கியம் தம்பதிகளின் மாளிகையில்தான் விருந்துண்டோம்' என்றான். அதற்கு ராஜேஸ்வரி, 'ஆ, அப்படியா! 'நேற்றுகூட அவ்விடம் விருந்துக்குச் சென்றீர்களா? அவனுக்குச் சாவகாச மிருந்திருந்தால் என் தாயாரும் அவனை ஒரு விருந்தினனாக ஏற்றிருப்பாளே. ஏனெனின், உன்னுடைய நண்பர்களெல்லாம் எங்களுக்கும் நண்பர்களே' என்றாள்.

அதைக் கேட்ட தியாகராஜன், 'நீ இவ்வாறு உறுதி கூறியதற்காக மிக வந்தனம்; அதிருக்கட்டும். நான் உனக்கு ஒரு முக்கியமான கேள்வி கேட்கப் போகிறேன். நீ சரியான பதில்சொல், என்னமோ கேள்வியென்று பயந்துவிட வேண்டாம். உன் தாயாருக்கும் சந்திரசேகரம் பிரபுவுக்கும் எப்போது சாந்தி நடக்கப்போகிறது?' என்று கேட்டான். அதற்கு அவள், 'நான் அதைப்பற்றி ஒன்றும் கேள்விப்படவில்லை. என் தாயார் அவ்விஷயத்தில் என்னுடன் பிகுவாய் இருக்கிறாள். எனினும் அவள், தன்னைவிட மிக்க இளையவனை அவனைக் கலியாணம் செய்து கொண்டால் உலகம் பரிகசிக்குமே யென்று நினைக்கிறாள் போலத் தெரிகிறது' என்றாள். அதற்கு அவன், 'ஓ, அது முடியுமா? நமது இன்பத்தை நாம் கவனிக்கும்போது உலகம் என்ன சொல்கிறதென்பதைக் கவனிக்க முடியுமா?' என்றதும் அவள், 'நீ மட்டும் நாம் இருவரும் விவாகம் செய்து கொள்ளப் போகிறோம் என்பதைப் பகிரங்கமாகச் சொல்லாமல் தானே இருக்கிறாய். யாரேனும் ஒருவர் அல்லது இருவரிடம் சொல்லியிருக்கலாம். அந்த வகையில் மோகனசுந்தரத்தினிடமும் சொல்லியிருப்பா

யென்றே நம்புகிறேன்' என்றாள். அதற்கு அவன், 'இல்லவே யில்லை. நான் யாரிடமும் சொல்லவில்லை. அன்று விருந்து மண்டபத்திலும் நான் இதை யாரிடமும் சொல்லக் கூடாதென நீ கூறவில்லையா? அதன்படியே நான் நடந்திருக்கிறேன்' என்று விடையளித்தான்.

அப்போது அவள், 'சரி, அது கிடக்கட்டும். நீ இப்போது என் தாயாரைப் பற்றித் திடீரென்று கேட்டதன் விசேஷமென்ன?' என்று கேட்டதற்குத் தியாகராஜன், 'நான் உன்னை விவாகம் செய்துகொள்ள விரும்புவதாக உன்னிடம் தெரிவித்ததும் நீ அதற்குச் சம்மத மளித்தபோது நான் அடைந்த சந்தோஷத்துக்கு அளவேயில்லை. ஆ! அந்த சந்தோஷத்தை விவரித்துக் கூறவும் என்னால் முடியாது. உண்மையிலேயே விவாகத்தை எப்போது முடிப்பதென்பதுபற்றி யோசித்தபோது உன் தாயார் விஷயம் முடியும் போதுதானே நமதும் முடியும் என்று நினைத்தே இதைக் கேட்டேன். இரண்டு விவாகங்களையும் ஒரே நாளில் முடிப்பது சௌகரிய மல்லவா? நாம் இருவரும் கணவனும் மனைவியுமாக வாழப்போகிற நாள் சமீபத்திலேயே இருக்கிறதென்று நம்புகிறேன்' என்றான். அப்போது ராஜேஸ்வரி, 'அன்பா! நான் இதைப்பற்றி இன்று என் தாயாரைக் கேட்டுச் சொல்கிறேன். நீ என்னை விவாகஞ்செய்து கொள்வதாகச்சொல்லி இரண்டு மூன்று நாட்கள் தானே ஆகின்றன. விவாகத்துக்கு முன் நாம் இன்னும் சிறிது பழகவேண்டாமா?' என்று கேட்க, அவன், 'உண்மைதான். இருந்தாலென்ன? நாம் அதிக காலமாகவே பரஸ்பரம் ஒருவரை யொருவர் அறிவோமல்லவா? நாம் எவ்வளவு காலமாக நெருங்கிய பழக்கமுடை

யவர் என்பது உலகத்துக்குத் தெரியவேண்டிய அவசிய மென்ன? நான் அவசரப்படுவதுபற்றி மன்னிக்கவும். வீணாக ஏன் காலதாமதம் செய்யவேண்டும் என்பது தான் என் அபிப்பிராயம். நாம் இருவரும் பரஸ்பரம் இவ்வளவு உண் மையான அன்புடன் இருக்கும்போது ஏன் காலங் கடத்த வேண்டும்?'' ஆதலால் நீ உன் தாயாரைக்கேட்டு விஷயத் தைத் தெரிந்து வைத்துக்கொள். நானும் ஒரு அவசர வேலை யாகப் போகவேண்டியிருக்கிறது. நாளை நான் வரும்போது எனக்குத் தகவல் அறிவிக்கவேண்டும்' என்ருன்.

அவ்வாறு தியாகராஜன் கூறிய பிறகு இருவரும் பரஸ் பரம் தழுவிக்கொண்ட பின்னர் அவ்விடத்தை விட்டுப் புறப் பட்டனர். தியாகராஜன் குதிரைமீது ஏறிக்கொண்டு அம் மாளிகையை விட்டுப் புறப்பட்டான். ராஜேஸ்வரி மாளிகை யில் நுழைந்துவிடாமல் அத்தோட்டத்திலேயே வேறொரு பக்கமாக உலாவிக் கொண்டிருந்தாள். அவள் அவ்வாறு உலாவியதன் காரணம் தியாகராஜனை விவாகம் செய்துகொள் ளும் விஷயமாய் ஒரு முடிவுக்கு வந்துவிடுவதா என்னும் யோசனை ஒன்று, மோகனசுந்தரம் அந்நகரிலேயே இருந்து சிறிதுநேரம் கழித்தாயினும் தன்னை வந்து காணலாம் என்னும் யோசனை ஒன்று' அவன் வராவிட்டால் அவனை வெறுத்து விட்டுத் தியாகராஜனையே மணந்துகொண்டு விடுவது என்னும் முடிவுக்கு வந்துவிடுவதா என்றும் யோசித்துக் கொண்டிருந் தாள். மணியும் கழிந்துகொண்டே வந்தது. ராஜேஸ்வரி தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கிருளே யொழிய மோகனசுந்தரம் வந்தபாடில்லை. இனி அவன் வரமாட்டான் என்று உணர்ந்தாள். அதனால் அவளுக்கு அதிக ஏமாற்றமும் துக்கமும் ஏற்பட்டது. ஆனல் அவ்வாலிபனிடம் அவளுக்கு

வெறுப்பு ஏற்படவில்லை. அவனிடம் அவளுக்கு ஒருவிதமான ஆவலும் ஆர்வமும் இருந்து கொண்டிருந்ததேயொழிய அது குறையவேயில்லை. ஆனால் அவனுடன் கடிதப் போக்குவரத்தாவது வைத்துக்கொள்ள என்னசெய்வது என்று யோசித்தாள். இரத்தினபுரியில் அவன் எங்கு வசிக்கிறான்? புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அவனுடைய பெற்றோர்கள்தான் யார்? என்பதொன்றும் அவளுக்குத் தெரியாது. அவைகள் தெரிந்திருப்பதாகவே வைத்துக்கொண்டாலும் தியாகராஜனே விவாக தினத்தை நிச்சயித்து விடவேண்டுமென அவசரப்படுத்துவதால் ராஜேஸ்வரிக்கு மோகனத்தைக் காணவும் அவகாசமில்லை.

இவ்வாறு ராஜேஸ்வரி யோசித்துக் கொண்டிருந்தபோது அவளுக்கு ஒரு யோசனை உண்டாயிற்று. அதாவது இன்னும் ஒருமாதம் கழித்து ஒருநாள் குறிப்பிட்டுவிட்டு அதற்குள் மோகனத்துடன் கடிதப் போக்குவரத்து நடத்த வழி கண்டுபிடிப்பதென முடிவு செய்தாள். அவள் தானே எக்காரணத்தைக் கொண்டும் இரத்தினபுரிக்குச் செல்லமுடியாது. தன் தாயாரையும் சந்திரசேகரம் பிரபுவையும் தனியே மாளிகையில் விட்டுச்சென்றால் ஊர்ஜனங்கள் அபவாதம் கூறக்கூடும். கடிதம் எழுதலாமென்றாலோ அவளுக்கு அவனுடைய விலாசம் தெரியாது. மோகனம் தானாகவே கடிதம் எழுதுவான் என எண்ணினாள். பாக்கியம் தம்பதிகள் வீட்டு விருந்தில் தனியறையில், இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது மோகனம் ராஜேஸ்வரியின் மோகவலையில் மீண்டும் சிக்கி அவளிஷ்டப்படியே நடப்பதாக உறுதி கூறத் தயாராக இருந்த வேளையில் அல்லவோ தியாகராஜன் அங்கு வந்துவிட்டான். ஆதலால் அவன் தன்னிடம் இன்னும் மோகங்கொண்டிருப்பானென்றும், அதே ஞாபகமாக ஊருக்குப் போவதால்

அங்கிருந்து எப்படியாவது தனக்குக் கடிதம் எழுதுவானென்றும் நினைத்தாள். அன்றுமாலை ராஜேஸ்வரி தன் தாயாரிடம் எப்போது சந்திரசேகரம் பிரபுவும் அவளும் விவாகம்செய்து கொள்ளப் போகிறார்கள் என்று விசாரித்தாள். அதற்கு ஹேமவதிசீமாட்டி பின்வருமாறு கூறலானாள்:—

"அன்புள்ள ராஜேஸ்வரி உனக்கும் தியாகராஜனுக்கும் முதலில் விவாகம் நடக்கமுடியாது என்பது வாஸ்தவமே. ஏனெனின் அவ்வாறு விவாகம் நடந்துவிட்டால் நீ என்னைத் தனியே சந்திரசேகரம் பிரபுவினுடன் விட்டு உன் மாமியார் வீட்டுக்குச்செல்ல நேரிடுமல்லவா? இப்போதே அவனுடைய சகோதரியும் சித்தியும் போய்விட்ட பிறபாடு அவன்மட்டும் இங்கு இருப்பது ஜனங்களுக்குச் சந்தேகத்தைக் கொடுக்கக் கூடியதாகவே இருக்கிறது. அதிலும் நீயும் போய்விட்டு நான் தனியே அவனுடன் இருப்பேனானால் ஜனங்கள் கட்டாயம் பலவாறு பேசுவார்கள். ஆகவே உன் விவாகம் முதலில் நடக்க முடியாதென்றால் எங்களுடைய விவாகமும் முதலில் நடக்க முடியாததாகவே இருக்கிறது. ஏனெனில் எங்களுக்கு முதலில் விவாகமானால் நாங்கள் சிலகாலமாவது இன்பக்களியாட்டக் காலங் கடத்த வெளியில் எங்கேனும் போய்த் தங்கி இருக்க வேண்டும். அப்போது நீர் மாளிகையில் தனியாக இருந்தல்லவோ அப்போதைக் கப்போது தியாகராஜனை வரவேற்க வேண்டும். நீங்களிருவரும் தனியே மாளிகையில் இருந்தால் ஜனங்கள் ஏதாவது சொல்வார்கள் அல்லவா? ஆகவே இருவருடைய விவாகமும் ஒரே நாளில் நடக்கவேண்டியதாக இருக்கிறது. இன்னும் பதினைந்து தினங்கள் கழிந்த பின்னர் விவாக முகூர்த்தம் நிச்சயிக்கலாமென்று இருக்கிறேன்."

இதைக் கேட்ட ராஜேஸ்வரி, 'பதினைந்து நாட்கள்தானா?

காலம் அதிக சமீபத்திலிருக்கிறதல்லவா' என்றாள். அதற்குச் சீமாட்டி, 'இல்லவே இல்லை. காலத்தைக் கடத்த என்னால் முடியாது. இக்காரியத்தை உடனே முடித்துவிடவேண்டும்' என்று கூறினாள். அப்போது குமாரி பரிகாசமான தோரணையில், 'சரிதான் நான் காரணம் தெரிந்துகொண்டு விட்டேன். சீக்கிரத்தில் அவனுடைய மனைவியாய் விட்டால் தான் ஒரு குழந்தைக்குத் தாயானாலும் அபவாதம் இல்லாமற்போகும் என்று நினைக்கிறாய்' என்று கூறியதும் சீமாட்டி அதிக கோபத்துடனும் ஆத்திரத்துடனும், 'பெண்ணே! அப்படியெல்லாம் என் விஷயத்தில் உளறாதே; நீ இதற்குள் தியாகராஜனிடமிருந்து ஒரு குழந்தையைப் பெற்றுவிடாமல் இருப்பதற்கு வேண்டிய எச்சரிக்கையுடன் இரு' என்று சொல்லிவிட்டு அந்த ஆத்திரத்திலேயே அவ்வறையை விட்டுச் சென்றாள். தன்னுடைய பிரத்யேக அறைக்குச் சென்று, தன் மகள் தனக்குக்கேட்ட கேள்வியையும், இன்னும் தனக்குள்ள பல சங்கடமான சந்தர்ப்பங்களையும் எண்ணி எண்ணித் துக்கத்துடன் கண்ணீர் விட்டாள். அப்போது அவளுக்கும் தெரியாமல் அவள் பலவிதமான சந்தர்ப்பங்களைப் பற்றி யெல்லாம் உரக்கப் பேசினாள். இந்த நிலைமையில் அவ்வறையின் கதவைத் திறந்துகொண்டு சந்திரசேகரம் பிரபு அங்கு வந்தான். ஆனால் ஹேமவதி சீமாட்டி அதைக் கவனிக்கவேயில்லை. அவன், 'கண்மணியே! இவ்வாறு கண்ணீர் விடுவதற்கு என்ன காரணம்' என்று கேட்டான். அதுவும் அவள் காதில் விழவில்லை. ஆகவே அவன் இன்னும் உரத்த குரலில், 'மாதே; என்ன சங்கதி? ஏன் இவ்வாறு துக்கத்துடன் இருக்கிறாய். நாம் இருவரும் கல்யாணம் செய்து கொள்ளப்போகும் தருணத்திலா இவ்வாறு நீ வருந்த வேண்டும்' என்று கேட்டான்.

அவன் ஊக்கக் கத்தியதால் அது சீமாட்டிக்குக் கேட்கவே அவள் திடீரென்று இதை உணர்ந்து கண்களைத் துடைத்துக்கொண்டு, 'பிரபுவே, நீ இங்கு எவ்வளவு நேரமாக இருக்கின்றாய்?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'நான் சில நிமிஷங்களாகத்தான் இங்கு இருக்கிறேன். நீ ஏதோ முணுமுணுத்தாயே. அது என்ன சங்கதி?' என்றான். அப்போது அவள், 'பிரபுவே! நான் முணுமுணுத்தது எனக்குத் தெரியாது. ஆயினும் நம்முடைய விவாக வாழ்க்கை நமக்கு இன்பத்தை அளிக்காது என்றுதான் நான் நினைக்கிறேன்' என்றாள். அதைக் கேட்டதும் அவன் அதிக ஆத்திரமடைந்து, 'இன்பமா! அது இல்லை என்றுதான் வைத்துக் கொள்வோம். நான் சில தினங்களுக்கு முன்வரை அதிக செலவாளியாகவும், துன்மார்க்கனாகவும் இருந்தபோதும் நான் இன்பத்துடனேயே இருந்தேன். ஆனால் எப்போது உன்னுடைய மாயவலையில் சிக்கினேனோ அது முதல் எனக்கு இன்பமென்பது சிறிதும் கிடையாது' என்றான். அப்போது அவள், 'அப்படியெல்லாம் பேசாதே. நீயாவது என் வலையில் சிக்கவாவது? எனக்கென்ன சக்தி இருக்கிறது? நீ சொல்லும் வேலைகளைச் செய்ய நீ இஷ்டப்படுவதால் தான் நானும் அதைச்சொல்கிறேன். அப்படியிருக்கும்போது என் மீது பழி போடுவதில் என்ன பயன்?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'மாதே, வாயை மூடு; நீ ஒரு விஷப் பாம்பு போன்றவள். உன்னுடைய இணையற்ற அழகைக் கண்டு நான் மோகங்கொண்டேன். அதுமுதல் நான் உனக்கு அடிமையானேன். இன்றளவும் உன்னுடன் இருப்பதிலேயே எனக்கும் பிரியமதிகம். ஆனால் நான் உன் குணத்தை அடியோடு வெறுக்கிறேன். உன்னிடம் சேர்ந்த பிறகு உலகில் மற்றவர்களைக் காணவும் எனக்கு வெட்கமாக இருக்கிறது

நான் ஏதோ குற்றவாளிபோல் எனக்கே தோன்றுகிறது, என்று பலவாறு கூறினன்.

அப்போது ஹேமவதி சீமாட்டி, 'ஐயா, அப்படி யெல்லாம் பேசாதே. நீ பேசுவதை யாரேனும் கேட்டுக்கொண்டிருப்பார்களே! இப்போது சுவர்களுக்கும் காதுகள் இருக்கின்றன என்றே நினைக்கவேண்டி யிருக்கிறது' என்றதும் சந்திரசேகன், 'அதிருக்கட்டும். நமது இரகசியம் பத்திரமாக இருக்கிறதா? உன் மகள் ராஜேஸ்வரி, என்னைப் பார்க்கும் போதெல்லாம் ஏதோ என் இரகசியத்தை அதிகம் தெரிந்து கொண்டு அதனால் என்னை அடக்கும் சக்தி யுடையவளைப் போல் விரைத்துப் பார்க்கிறாளே. அதற்கென்ன காரணம்' என்று வினவினன். அதற்கு ஹேமவதி சீமாட்டி, 'சந்திரசேகரம்! நீ என்ன பைத்தியக்காரனா? அவள் உன்னை இவ்வாறு பார்ப்பதன் காரணம் உனக்குத் தெரியாதா? அவள் நம்முடைய இரகசிய சம்பந்தத்தைக் கண்டுபிடித்துவிட்டிருப்பாள். நீ இராக்காலங்களில் திருட்டுத்தனமாக என் படுக்கை யறைக்கு வருவதை அவள் பார்த்துவிட்டிருப்பாள். நமக்குள் இருக்கும் சம்பந்தத்தை அவள் அறிந்துகொண்டு விட்டதாக என்னிடம் சிறிது நேரத்துக்கு முன்பு தெரிவித்ததால் தான் நான் இப்போது இவ்வாறு துக்கப்பட்டேன்' என்றாள். அப்போது சந்திரசேகரன், 'அப்படியானல் நமது மற்றொரு இரகசியமாவது வெளியாகாமல் இருக்கிறதென்பது நிச்சயமா? நான் அன்று பாக்கியம் தம்பதிகள் வீட்டு விருந்துக்கு வரவில்லை தெரியுமா? தியாகராஜன் எனக்கு நல்ல சிநேகிதனாக இருந்தாலும் நான் அவனது முகத்தைக் காணவும் வெட்கப்படுகிறேன். அன்று அவன் என் அறைக்கு வந்தபோது அப்போது தான் வெடி தீர்க்கப்பட்ட துப்பாக்கி அங்கிருந்ததை அவன் கண்டான். அதனால் அவன் ஏதேனும் விஷயத்தைக்

சிரகித்து விட்டிருப்பானென்று அஞ்சுகிறேன். அதற்காகத் தான் அவன் இப்பால் என்னைவந்து பார்ப்பதேஇல்லை' என்று தன்தேகம் முழுதும் நடுங்க அச்சத்தால் கூறினன்.

அதைக்கேட்ட ஹேமவதிசீமாட்டி, 'அப்படியொன்று மில்லை தியாகராஜன் இன்றுகூட இம்மாளிகைக்கு வந்திருந் தான்' நம்மிடம் முன்போலவே அபிமானத்துடன் இருக்கி றான். ராஜேஸ்வரிக்கும் அவனுக்கும் விவாகம் எப்போது நடக்குமென்றும் விசாரித்தான். இன்னும் பதினைந்துதினங்க ளில் அவர்களுக்கும் நமக்கும் ஒரேகாலத்தில் விவாகம் நடக்கு மென்று தெரிவித்திருக்கிறேன். அவன் வீட்டில் ஒருநண்பன் தங்கியிருந்ததால் அவன் இரண்டொருநாட்கள் நமது மாளி கைக்குவரவில்லை. எனினும் நீ மிக்க தைரியத்துடன் இருக்க வேண்டும். இவ்வாறெல்லாம் பயந்துகொண்டு ஒன்றும் பேசி விடக்கூடாது' என்றாள். அதற்கு அவன், 'நான் தைரியத்து டன் இருக்கவேண்டுமென்று தான் எவ்வளவோ முயற்சி செய்கிறேன். ஆனல் சிற்சில சமயங்களில் பீதியானது என்னை ஆட்கொண்டு விடுகிறது. அன்று தியாகராஜன் என் அறைக்குவந்து தவறிப்போன துப்பாக்கி எங்கேஎன்று கேட்டபோது என்முகம்பளிங்குபோல்வெளுத்துப்போயிற்று ரஸ்தாவில் எங்கேனும் நடந்துபோகும்போதும் என் நடத் தைகளெல்லாம் நினைத்துக்கொண்டால் எனக்கே சிரிப்பு வந்துவிடுகிறது. உன்அழகைக் கவனிக்கும்போது அப்படிப் பட்ட அழகுடைய உன் இன்பத்தை அனுபவிப்பதற்காக எதையும் தியாகம் செய்யலாமென்று தோன்றுகிறது. மறு நிமிஷமே உன் நடத்தைகளைக் கவனிக்கும்போது உன்னிடம் அளவுகடந்த வெறுப்பு ஏற்படுகிறது' என்று கூறினன். அதைக்கேட்டு அதிக ஆத்திரமும் மனக்கசப்பும் அடைந்த ஹேமவதி, 'சந்திரசேகரா! ஏன் இப்படி அவதூறுபேசுகிறாய்

நீ என் கணவனாக இருக்கவேண்டுமென்று நான் உன்னைக் கட்டாயப் படுத்துகிறேனா அல்லது என் கணவனாக ஏற்றுக் கொள்ளும்படி நீ கட்டாயப்படுத்துகிறாயா என்னும் உண்மையைக்கவனி' என்றதும் அவன் அச்சீமாட்டியின்மீது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவளை இறுகத் தழுவிக்கொண்டு, 'ஆம்; நான்தான் என்னை உன்கணவனாக ஏற்றுக்கொள்ளும்படி கட்டாயப்படுத்துகிறேன். நீ என்னை ஏமாற்றத்தானே முயற்சித்துவருகிறாய். நான் இவ்வளவு சிரமப்படுவதும் இந்தகைய அபாரமான குற்றங்களைச்செய்வதும் உன்னைப்பெற்று இன்பமடைய வேண்டுமென்னும் எண்ணத்தாலேயே அல்லவா? அப்படியே இப்போது என் இஷ்டப்படியே உன் இன்பத்தைப் பருகுகின்றேன். ஆயினும் சமூகவாழ்விலும் உயர்ந்த அந்தஸ்தையடையவேண்டுமாதலால் உன்னை விவாகமசெய்து கொள்ள விரும்புகின்றேன். ஆதலால் நீ என்னை எளிதில் ஏமாற்றிவிடமுடியாது. இப்பொழுதேனும் விஷயத்தை அறிந்துகொண்டாயா?' என்றுகேட்டான். அப்போது ஹேமவதிசீமாட்டி, 'எல்லாம் எனக்குத் தெரிகிறது. நீ இவ்வாறு சிற்சிலசமயங்களில் பீதியடைந்து கண்டபடியெல்லாம் உளறிக் கொட்டக்கூடாது. யாரேனும் மறைந்திருந்து நீ உளறுவதைக் கேட்டுவிட்டால் உனக்குமட்டுமேயல்லாமல் எனக்கும் பலவிதகஷ்டங்கள் வந்துவிடுமல்லவா? நான் மிக்க அழகானவள் என்று நீ அடிக்கடி கூறுகிறாய். அந்த அழகை நீ அனுபவித்து இன்பமுறும்படி நான் செய்யக் காத்திருக்கிறேன். நீமட்டும் கடைசிவரை தைரியத்துடன் நடந்துகொள்ள வேண்டும். எப்படிப்பட்ட சமயத்திலும் எந்த சங்கதியையும் வெளிவிடக்கூடாது' என்றாள். அதற்கு அவன், 'உண்மையே நீ கூறும் எச்சரிக்கையை நான் கவனிக்கிறேன். இனி தைரியத்துடனும் ஜாக்கிரதையாகவும் நடந்து கொள்கிறேன்' என்று விடையளித்தான்.

91-வது அத்தியாயம்.

மோகனதாஸின் மாளிகை.

காட்டு மிராண்டியைப்போல் வேஷ மணிந்து கொண்டு முதலில் தான் ஆற்றில் விழுந்து தவித்தபோது மோகனதாஸின் உதவி பெற்றவளும், பிறகு மோகன தாஸை யும், செல்வநாதர் என்னும் மனோகரம் பிரபுவையும், ராட்சஸ குப்பன் நடுக்குப்பத்தில் கொன்றுவிட முயற்சித்தபோது அவர்களைக் காப்பாற்றியவளுமான மரகதம் அக் கனவான் கள் இருவரையும் மோகனதாஸ் மாளிகையில் சந்திப்பதாகக் குறிப்பிட்ட தினத்தன்று மாலை மனோகரம் பிரபு மோகன தாஸின் மாளிகைக்கு வந்தார். அவர்களும் ராஜலட்சுமியு மாக எல்லாரும் மாலை ஆகாரம் அருந்தியபின் பலவிஷயங் களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது மனோ காம் பிரபுவுக்கு முன்பு நடுக்குப்பத்தில் தங்களுக்கு நேர்ந்த விபத்து ஞாபகத்துக்கு வரவே அதைப்பற்றிப் பிரஸ்தாபித் தார். அதைக் கேட்ட ராஜலட்சுமி நடுக்கத்துடன், ஆ! அதைப்பற்றி நினைத்தாலும் அச்சமாக இருக்கிறதே. ஆபத்து ஏற்படக்கூடுமென்று நான் முன்னமே சொன்னேனல்லவா? உங்களைக் கொல்லும்படி அவனை யார் ஏவி இருப்பார்கள்,' என்று கேட்க, அப்பெரியார், 'இதில் சந்தேகமேயில்லை. இது ஹேமவதி சீமாட்டியின் வேலைதான். அவள் இதற்கு முன்பே ராட்சஸ குப்பனுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருந்தாள். அன்றியும் நாம் அவனுக்குக் கொடுப்ப தாகச் சொன்ன தொகையைவிட அவன் அதிகம் எதிர் பார்த்தானென்றால் அது ஹேமவதி சீமாட்டியினிட மிருந்து தான் என்பதில் சந்தேகமில்லை' என்றார். அதற்கு அப்பெண்

மணி, 'ஐயா! ஹேமவதி சீமாட்டியினிடமிருந்து சந்திரசேகரம் பிரபுவைப் பிரித்து விடவும், அச்சீமாட்டியைத் தக்கபடி தண்டனைக்குள்ளாக்கவும் நீங்கள் முயற்சி செய்யவில்லையா?' என்று கேட்டாள். அப்போது அவர், 'சந்திரசேகரனைப் பிரிக்க இன்னும் ஏற்பாடு செய்யவில்லை. அச் சீமாட்டியின் மீது பல குற்றங்கள் இருக்கின்றன என்பது உண்மையே. ஆனல் அவற்றை ருஜுப்படுத்த இன்னும் தக்க சாதனங்கள் அகப்படவில்லையே. இப்போது நாம் ஏதேனும் குற்றம் சுமத்தினுல் அவள் உடனே அதை ஒரேபிடிவாதமாகவும், சாமர்த்தியமாகவும் மறுத்து விடுவாள். ஆயினும் அவளை மடக்கக்கூடிய காலம் சீக்கிரத்தில்தான் இருக்கிறது. இன்று மாகதம் வருவாளல்லவா? அவளிடத்திலிருந்து நாம் சில விஷயங்களை அறியலாம்' என்றார். அப்போது தோட்டத்தின் வாயிற்படி கதவும் திறக்கப்பட்டது.

அக்கதவைத் திறந்துகொண்டுவருவது யார் என்று அம்மூவரும் கவனித்தார்கள். மரகதம் அங்குவந்து நின்று, 'நான் குறித்தவேளையில் வந்துவிட்டேனல்லவா?' என்று கூறிக்கொண்டே பிறருடைய உபசாரத்தையும் எதிர்பாராமல் அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டாள். அப்போது மனோகரம்பிரபு, 'ஆம்; அம்மா; நீ சரியானவேளையில் வந்துவிட்டாய். நீ கொண்டுவரும் சங்கதியை அறிய நாங்கள் மிக்க ஆவலுடையவர்களாய் நீண்டநேரமாகக் காத்திருக்கிறோம். இதோ, இப்பெண் ராஜலட்சுமி நமது மோகனதாஸின் சகோதரி' என்று கூறினர். அதைக்கேட்டதும் மரகதம் மிக்க ஆச்சர்யத்துடன், 'ஓ, மோகனதாஸின் சகோதரியா' மிகச் சந்தோஷம் நான் இங்குவருவதாக வாக்களித்தபின்னர், எந்த வேலைக்காக இங்கு வருவதாகச்சொன்னேனே அதைக்கண்டு

பிடிக்கவே ஒவ்வொருநிமிஷமும் முயன்றேன். மர்மத்தை அறிந்துகொண்டு வராமல் நான் மட்டும் குறித்தவேளையில் வருவதனால் என்னபிரயோசனம்?' என்றாள். அப்போது மோகனதாஸ் பரபரப்புடன், 'ஓ, கோவிந்தனைக் கண்டுபிடித்து விட்டாயா? என் தந்தையார் இறந்துபோனபோதே அவருடைய இரகசியமும் மறைந்துவிட்டதோ என்று நினைத்தேனே. அதைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்துவிட்டாயா? எல்லா விவரங்களையும் உடனேசொல்' என்றான். அதற்கு மாகதம், 'அப்பா! அவசரப்படாதே. நான் உடனே அந்த விஷயத்தைப்பற்றிப்பேச ஆரம்பித்து விடாததற்கும் சில காரணங்கள் இல்லாமல் இல்லை. அது அதிகமுக்கிய விஷயமாதலால் சர்வஜாக்கிரதையுடன் சொல்லவேண்டியதாய் இருக்கிறது' என்று கூறினள். அச்சமயத்தில் அவர்கள் உட்கார்ந்திருந்த அவ்வறையில் திடீரென்று யாரோபுகுந்து பளபளவெனப் பிரகாசித்த நீண்ட கத்தியை ஓங்கி மாகதத்தின் தோளில் ஒரேவெட்டாகக் குத்திவிட்டு ஓடிப்போனான். மாகதமும் இரத்தம்பீறிட்டுவர பூமியில் சாய்ந்தாள். அங்குவந்து அவ்வாறு கொடியவேலைசெய்தவன் ராட்சஸகுப்பனே என அறிந்ததும் மோகனதாஸும் மனோகாம்பிரபுவும் திடுக்கிட்டுப்போனார்கள். ராஜலட்சுமியும் மனோகாமும் மாகதத்துக்குத் துணைபுரியச்சென்று அவளுக்குவேண்டிய சிஷ்ருஷைகளைச் செய்தனர். மோகனதாஸோ எத்தகைய ஆயுதமும் எடுத்துக்கொள்ளாமலும் ராட்சஸகுப்பனைப் பின்தொடர்ந்து சென்றான்.

மாகதம் கீழே ஸ்மரணையற்று விழுந்ததைக் கண்ட அவ்வீட்டுவேலைக்காரர்கள் திக்பிரமையுடன் அவ்விடம்வந்து கூடினர். ராஜலட்சுமி தன்னுடைய கைக்குட்டையால் இரத்தத்தை துடைத்து மற்ற சேவகர்களின் துணையால் அம்மாதை ஒரு சோபாவில் படுக்கவைத்தாள். மனோகரம் பிரபு

சமீபத்திலுள்ள டாக்டர் வீட்டுக்குச் சென்று அவரை அழைத்து வந்தார். மாகதம்இறந்து விடாமல் பிழைத்தாளென்றாலும், அப்படுகாயத்தினின்றும் தேறுவதற்குச் சில காலம் செல்லுமென்று கூறினர். மாகதத்தை அவ்வீட்டிலேயே வைத்துக்கொண்டு வேண்டிய சிஷ்ரூஷைகளை யெல்லாம் செய்யவேண்டுமென்று ராஜலட்சுமி விரும்பினள். மோகனதாஸ், குப்பனைத் தூரத்திக்கொண்டு போனதை ராஜலட்சுமியும் மனோகாமும் அறிவார்களாதலால், எவ்வித ஆயுதமும் இல்லாமல்போனவன் ஒருகால் குப்பன்கையில் மாணமடைய நேரிட்டாலும் நேரிடலாமென்று அஞ்சினர்கள். ஆனால் டாக்டர் வீட்டுக்கு வந்து போகும்வரை அவர்கள் மாகதத்தின் விஷயத்திலேயே கவனமாய் இருந்தபடியால் மோகனதாஸைப்பற்றி நினைக்கவும், அவர்களால் முடியவில்லை. டாக்டர் சென்றபிறகு அவர்கள் இருவரும் மோகனதாஸ் கதியாதாயிற்றோ என்று நினைத்தார்கள். அவன் அவ்விடத்தை விட்டுச்சென்று இரண்டுமணி நேரத்துக்கு மேலாய்விட்டதால் அவனுக்கு என்ன ஆபத்துநேர்ந்ததோ என்று அவனுடைய சகோதரியாகிய ராஜலட்சுமி அஞ்சினள். தானே அவனைத் தேட ஓடலாமா என்றும் நினைத்தாள். அப்போது மனோகார் அவளுக்குத் தேறுதல் கூறித் தான்போய் அவனைத்தேடி வருவதாகச்சொல்லி அப்படியே புறப்படத் தயாரானபோது மோகனதாஸும் வந்துவிட்டான். அவன் மிகச் சிரமப்பட்டு போராட்டம் நடத்தியவன்போல் காணப்பட்டான். அவன் ஆடைகளெல்லாம் கலைந்தும் அழுக்கடைந்தும் இருந்தன. மிகவும் சோர்வடைந்திருந்தான். ராஜலட்சுமி இதையெல்லாம் கவனியாமல் அவன் க்ஷேமத்துடன் வந்து சேர்ந்தானே என்னும் திருப்தியுடன் அவனைத் தழுவிக்கொண்டு சந்

தோஷமடைந்தாள். மோகனதாஸனும் காயமடைந்த மாகதத்தின் நிலைமை எவ்வாறு இருக்கிறதென்று விசாரித்தான். அவர்களும் விவரமாக நடந்ததையெல்லாம் சொன்னார்கள்.

அப்போது மோகனதாஸ், 'அம்மாது நம்மைப்போல் ஒருமனுஷி என்பதற்காகவும், என்னையும், மனோகரரையும் ஆபத்தினின்றும் காப்பாற்றியவள் என்பதற்காகவும் அவளுக்குச் சிஷ்ருஷைசெய்வது ஒருபுறமிருக்க, அவள் என் சம்பந்தமான முக்கிய இரகசியத்தை அறிந்தவளாய் இருக்கிறபடியால் எப்படியாவது அவளைக் காப்பாற்றி அவள் சொஸ்தமடைந்தபின்னர் அவளிடமிருந்து அதைக் கிரகித்துக்கொள்ள வேண்டியதற்காவது அவளை ஜாக்கிரதையுடன் கவனித்துக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது' என்று கூறினான். ராஜலட்சுமியும் மனோகரரும் அதை ஆமோதித்து அம்மாதை சர்வஜாக்கிரதையுடன் கவனிப்பதாகவே கூறினார்கள். அப்போது மோகனதாஸ் அதிக களைப்புடன் சோபாவில் சாய்ந்ததால் அவனுடைய சகோதரி ஒரு பாத்திரத்தில் வொயினையும் ஜலத்தையும் கலந்துகொண்டுவந்து கொடுத்தாள். அவன் அதைப் பருகியபின்னர் குப்பனைத் தூத்திக்கொண்டு போனஇடத்தில் நடந்ததையெல்லாம் விவரமாகக் கூறினான். ராட்சஸகுப்பனோடு போராட்டம் நடத்தியது மிகச் சிரமமாக இருந்ததாகவும், அவன் கைத்துப்பாக்கியை வைத்துக்கொண்டு சுட முயற்சித்தபோதெல்லாம் அவைகளுக்கும் தப்பி எப்படியோ அவனைப் பிடித்துக்கொண்டதாகவும், ஆனால் அவனை அசைக்கமுடியவில்லையென்றும், உதவிக்கு எவ்வளவு கூவியும் யாரும் வாராததால் அவனைக் கைதுசெய்ய முடியவில்லையென்றும், கடைசியில் அவன் தப்பி ஓடிவிட்டதாகவும், தான்மிக்க அயர்வுடன் வீட்டைநோக்கி வந்ததாகவும் கூறினான். இதையெல்லாம்

கேட்ட ராஜலட்சுமி தன் சகோதரன் எவ்வளவு கஷ்டங்களைச் சமாளித்திருப்பான் என்பதை நினைத்து அவனிடம் அனுதாபங் கொண்டாள்.

பிறகு மனேகாம்பிரபு, மறுநாள் காலையில் வருவதாகவும், மரகதத்தை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படியும் மோகனதாஸினிடமும் ராஜலட்சுமி இடமும் சொல்லிவிட்டு அவர்களுடைய அனுமதிபெற்றுத் தமது மாளிகைக்குப் புறப்பட்டார். ராஜலட்சுமி மரகதத்துக்கு வேண்டிய உபசாரங்களையெல்லாம் செய்துவந்தாள். மறுநாள்காலை டாக்டர் வந்து மரகதத்தின் நிலைமையைக் கவனித்ததில், அவளது உயிருக்கு ஆபத்தில்லையென்றும், ஆனல் அவள் நன்ருகப் புத்திஸ்வாதீனமும் பலமும் பெற்று பழையபடி எழுந்து நடமாடச் சிலவாரங்கள் ஆகுமென்றும் தெரிவித்தார். டாக்டர் வந்துபோன சிறிதுநேரத்துக்கெல்லாம் மனேகார் தமது குமாரனை மோகனசுந்தரத்துடன் அவ்விடம் வந்து சேர்ந்தார். மோகனசுந்தரமும் மோகனதாஸும் கலந்தாலோசித்தபின்னர் 'மரகதத்தை இவ்வாறு ராட்சஸகுப்பன் கொலைசெய்யும் உத்தேசத்துடன் தாக்கியதைப் போலீசாருக்குத் தகவல் தெரிவிப்பதே நல்லதென்னும் முடிவுக்குவரவும், மோகனதாஸ் சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குச்சென்று அங்கிருந்த அதிகாரியிடம் விவரத்தையெல்லாம் கூறி அதைப் பதிவுசெய்தான். போலீஸ் அதிகாரியும் ராட்சஸகுப்பன் தங்களுக்கும் தெரியுமென்றும், அவனைப்பிடிக்க ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தார். மோகனதாஸ் வீட்டுக்குத் திரும்பிவந்தபின்னர் மனேகார் அவனைத் தனியாகச் சந்தித்துப் பேசியபோது தம் குமாரன் மோகனம் கிருஷ்ணகிரிக்குப் போனதன் காரணத்தையும், ராஜேஸ்வரியிடம் அவன் காதல்கொண்டிருந்ததும்,சோதனைசெய்ததில் அவளது

அற்ப மனப்பான்மை வெளியானதும் விவரமாகத் தெரிவித்தார். அப்படிப்பட்ட விபசாரகுணமுடைய ஒருபெண்ணினிடமிருந்து மோகனம் தப்பியதுபற்றி மோகனதாஸ் சந்தோஷப்படுவதாக அப்பெரியாரிடம் தெரிவித்தான். அதற்கு அவர், 'எனதுகுமாரன் என்நண்பர் ரங்கநாதம் பிரபுவின் யோசனையைக்கேட்டு ராஜேஸ்வரியைத் திரஸ்கரித்துவிட்டு வந்துவிட்டானென்றாலும், அவன் தக்க உலக அனுபவமில்லாத வாலிபனாக இருத்தலாலும், முன்னரே அந்த அழகிய பெண்ணின் இன்பத்தை நுகர்ந்து அவளிடம் பூரண அன்புடையவனாய் இருந்ததாலும் அவளை மறந்துவிட அவனால் முடியவில்லை. அடிக்கடி அவளது உருவத்தைத் தன்மனக் கண்ணால் கண்டு வருத்தப்படுகிறான். ஆகவே அவன் அதை மறக்கும்பொருட்டு இன்றுமுழுதும் உங்களுடன் இருக்கட்டுமென்று அழைத்து வந்தேன்' என்று கூறினார்.

அதைக் கேட்டதும் மோகனதாஸ், 'இன்று மட்டுமா? இன்னும் ஒரு வாரம்வரை அவன் இங்கு இருப்பதாக இருந்தாலும் எங்களுக்குச் சந்தோஷமே' என்றான். அப்போது மனேகார், 'அப்பா! நீ இவ்வாறு கூறுவாய் என்பது எனக்குத் தெரியும். அவன் இஷ்டப்படி நடக்கட்டும். அவனுக்கு எவ்வளவு காலம் இங்கு இருக்க வேண்டுமென்று தோன்றுகிறதோ அவ்வளவு காலம் இருப்பதில் எனக்கு ஆட்சேபமில்லை. நான் எனது வக்கீலைக் கண்டு உன் சம்பந்தமாக ஹேமவதி சீமாட்டியைப் பற்றிச் சில விஷயங்களைக் கேட்க வேண்டியிருக்கிறது. ஆதலால் நான் போய் வருகிறேன்' என்று கூறிவிட்டு அவர் போய்விட்டார். மோகனசுந்தரம் மட்டும் அங்கேயே தங்கினான். அன்று பகல் மோகனதாஸ் தனது காதலியான ஷண்பகவல்லியைப் பார்க்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் மதனவல்லிச் சீமாட்டியின்

மாளிகைக்குச் சென்றான். ஆகவே, ராஜலட்சுமியும் மோகன சுந்தரமும் தனியாக இருந்தார்கள். ராஜலட்சுமி மரகதத்துக்கு சிஷ்ருஷை செய்யவேண்டிய வேளை தவிர இதர வேளையில் மோகனத்துடன் வேடிக்கையாகப்பேசியும், அவனுடன் தோட்டத்தில் உலாவியும், பியானோ முதலிய வாத்தியங்களை வாசித்தும் அவனை உற்சாகப் படுத்தினாள். அவன் சதா சர்வ காலமும் ஏதோ விசனப் படுபவன்போல் காணப்பட்டான். அதற்குக் காரணம் அவளுக்குத் தெரியவில்லை யென்றாலும் தங்களுக்கு இவ்வளவு உதவி செய்யும் ஒரு பெரியாருடைய குமாரனுக்கு உற்சாக மூட்டவேண்டியது தனது கடமை என நினைத்து அவள் மிக்க பரிசுத்தமான உள்ளத்துடன் அவ்வாறு அவனை உற்சாகப்படுத்தி வந்தாள். வெளியில் போன மோகனதாஸும் விரைவில் வீட்டுக்குத் திரும்பினான். அவன் மோகனத்துடன் பற்பல விஷயங்களைப் பற்றியும் பேசிக் காலங் கழித்ததால் மோகனம் ஒருவாறு உற்சாக மடைந்தான். மோகனதாஸின் வேண்டுகோளின் மீது மோகன சுந்தரம் இரண்டொரு நாட்கள் அங்கேயே இருந்தான்.

தினசரி ராஜலட்சுமி மோகன சுந்தரத்துடன் தனியாகவும் இருந்து தனது பாடல்களாலும், இனிய மொழிகளாலும் உற்சாகப் படுத்தியதால் மோகன சுந்தரம் ஒருவாறு ராஜேஸ்வரியை மறந்ததுடன் அந்த இரு பெண்களுக்குமிடையிலுள்ள வித்தியாசத்தையு முணர்ந்தான். ராஜலட்சுமி ராஜேஸ்வரியைவிட மிக்க அழகும் ஆற்றலும் உடையவளாய் இருந்தும் அவளைப் போலக் காமப்பித்து உடையவளாகவோ துர்க்குணங்க ளுடையவளாகவோ இல்லாமல் பரிசுத்த உள்ளத்துடனும், உயரிய குணநிசயங்க ளுடனும் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். இரண்டொரு நாட்கள்வரை அவளுடன் நெருங்கிப் பழகியதால் அவனுக்கு அவளிடம்

ஒருவித அபிமானமும், பிரியமும் ஏற்படலாயிற்று. இரண்டு நாட்கள் கழிந்த பின்னர் மோகன சுந்தரம் தன் வீட்டுக்குப் போனான். தன்னை நன்கு உற்சாகப்படுத்தி வைத்துக் கொண்டிருந்த ராஜலட்சுமியையும், மோகனதாஸையும் விட்டுச் செல்வது அவனுக்குச் சிறிது சிரமமாகவே இருந்தது. உற்சாகமும் மனத்திருப்தியும் இல்லாமலிருந்த தன் சகோதரன் மோகனதாஸின் வீட்டிலிருந்து திரும்பியபோது ஒருவாறு உற்சாகத்துடன் இருப்பதைக் கண்ட நவநீதம் அதிக சந்தோஷமடைந்தாள். அன்று பகல் சகோதரனும் சகோதரியும் தோட்டத்தில் தனியாகச் சந்தித்துப் பேசியபோது ராஜேஸ்வரியைவிட அழகில் சிறந்தவளாகவும், ஆனால் குணத்தில் சிறந்தவர்களாகவும் பெண்கள் இருக்கிறார்களல்லவா என்று கேட்டதற்கு மோகனம், அது, உண்மைதான் என்று ஒப்புக் கொண்டான். இதிலிருந்தே அவனுடைய புத்தி ராஜேஸ்வரி விஷயத்தில் சிறிது மாறுதல் அடைந்திருக்கிறதென்றும், அவன் ராஜலட்சுமியை அதிகம் மதிக்க ஆரம்பித்துவிட்டானென்றும் தெரிந்து கொண்டாள்.

நவநீதம் இவ்வாறு மோகன சுந்தரத்துடன் காதல் விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தபோது அவளுக்கு அந்தரங்கத்தில் பதிந்து கிடந்த காதல் வெளிக் கிளம்பலாயிற்று. ஆகவே அவள் தன் சகோதரனிடம், 'தம்பி நீ முன்பு ராஜேஸ்வரியை எப்படி நேசித்தாயோ அப்படியே இப்போது ராஜலட்சுமியை நேசிக்க ஆரம்பித்து விட்டதால் உன் காதல் விஷயம் எப்படியாவது பூர்த்தியாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. நீ சன்னியாசியாக இறக்க வேண்டியதில்லை. ஆனால் என் நிலைமையோ?' என்று சொல்லி முடித்தபோது எதிரில் அழகிய ஆடவன் ஒருவன் வரக்கண்டாள். அவனைக் கவனித்துப் பார்த்ததில் அவன், தன்னால் மனமாரக் காதலிக்கப்படும்

ஜனின ரஞ்சன பாபுவே எனத் தெரிந்ததும் நவநீதம் திடீ ரென்று தன் சகோதரனை விட்டு விட்டு ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவளுடைய காதலனிடம் சென்றாள். மோகனசுந் தரம் தனியாக விடப்பட்ட படியால் அவன் இன்னதுதான் செய்வதென்று தோன்றாமலும், ஒரு பக்கம் ராஜேஸ்வரியின் ஞாபகமும், மற்றொரு பக்கம் ராஜலட்சுமியின் தூய குண மும் அவன் மனத்தில் தோன்றவே அவன் ஒரு பைத்தியக் காரனைப்போல் பற்பல விஷயங்களைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டே தோட்டத்தின் வாயிற்படியையும் கடந்து அருகி லிருந்த ரஸ்தாவிற்குச் சென்றான். மோகனம் வாயிற்படியை விட்டு வெளி வந்ததும் ரஸ்தாவில் நின்று கொண்டிருந்த ஒரு ஆள் மோகனத்தை உற்றுப் பார்த்து, 'ஆம்; நாம் தேடி வந் தது இவனைத்தான்' என்று மனதிலேயே சொல்லிக் கொண் டான். அந்த ஆள் தன்னையே உற்றுப் பார்ப்பதால் ஒருகால் அவன் தன்னுடன் பேச விரும்புகிறானோ என்று மோகனம் நினைத்து அவன் அருகில் சென்றான். உடனே அந்த ஆளும் மோகன சுந்தரத்தினிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதன் மீது விலாசம் எழுதப்பட்டிருந்த எழுத்தைப் பார்த்த தும் மோகனம் பரபரப்புடன், 'ஓ, இது ராஜேஸ்வரியின் கையெழுத்தல்லவா' சரி, 'இது எனக்கு வேண்டாம். நீயே எடுத்துக்கொண்டு போ' என்று கூறி, அதைத் திருப்பிக் கொ டுக்கப் போனான். அப்போது அந்த ஆள், 'ஐயா, நான் ஹேம வதி சீமாட்டியின் மோட்டார் டிரைவருடைய சகோதரன். என்னிடம் ராஜேஸ்வரி சீமாட்டிக்கு நம்பிக்கை அதிகம். ஆத லால் இதைக் கொடுத்து அனுப்பினாள். நான் கிருஷ்ணகிரியி லிருந்து இவ்வளவு தூரம் வந்ததுடன் உன் இருப்பிடத்தை யும் மிகச் சிரமத்தின்மீது தெரிந்துகொண்டுவந்தேனே. அதற் காகவாவது அக் கடிதத்தைப் படிக்கக் கூடாதா? தயவு செய்து எனது சீமாட்டியைப் புறக்கணித்து விடாமல் அக்

கடிதத்தைப் படித்துப் பார்' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

அந்த ஆள் அவ்வளவு தூரம் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி மோகன சுந்தரமும் அக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:— 'ஆ, காதல; என்னைச் சந்திக்கும்படி நான் மன்றாடிக் கேட்டுக்கொண் டிருந்தும் நீ எனக்குத் தெரிவிக்காமலும் ஊருக்குப் போய்விட்டாயே அது நியாயமா? நீ உன் பிறப்பு வளர்ப்பு தெரியாமல் சாதாரண மனிதனாக என் வீட்டில் இருந்த போதே நான் உன்னை நேசித்ததுடன் என்னையே உன்னிடம் ஒப்படைத்ததோடு உன் பிறவியில் ஏதோ விசேஷ மிருக்க வேண்டுமென்றும் கூறினேன் அல்லவா? அதை மறந்து விடவேண்டாம். என்னைச் சோதிக்கவென்று நீ சமீபத்தில் கிருஷ்ணகிரிக்கு வந்தபோது நான் உன்னை மணப்பதாக ஒப்புக்கொண்டு விட்டிருந்தால் நீ சந்தோஷப் பட்டிருப்பாய். ஆனால் நான் கொடிய வறுமைக்கு அஞ்சினேன். நீயும் நானும் ஏழைகளாய் இருந்து ஒன்றுகூடி வாழ்வதால் வாழ்க்கையில் என்ன இன்பம் இருக்கப் போகிறதென்று நினைத்தே செல்வத்துக்கும் அந்தஸ்துக்கும் வேறொருவனை மணந்து கொண்டு என்னை மட்டும் உன்னிடமே உன் இஷ்டப்படி அனுபவிக்க ஒப்படைத்து விடுவதென நினைத்தேன். ஆனால் அது ஒழுக்க முறைப்படி தவறாக இருக்கலாம். ஆயினும் வேறு வழியில்லை. இதற்காக நீ என்னைத் திரஸ்கரித்துவிட்டுப் போய்விட்டாய். அதனால் நான் எவ்வளவு துக்கப்படுகிறேன் தெரியுமா? மேலும் இன்னொரு விஷயத்தையும் நீ கவனிக்க வேண்டும். உன் சகோதரி கொள்ளைத் தொழில் நடத்தினாள் என்பதற்காக என் தாயார் உன்னை வெறுத்ததுபோல் நான் உன்னை வெறுக்கவில்லை; உன்னிடம்

தனி அன்பு கொண்டேனே யொழிய உன் சகோதரியின் தொழிலென்ன என்பது பற்றிக் கவலைப் படவேயில்லை. அதற்காவது நீ என் தவறுகளை மன்னித்துவிடக் கூடாதா? ஆகவே இச் சந்தர்ப்பங்களை யெல்லாம் யோசித்தேனும் இனி நம்முடைய நிலைமை என்ன என்பதைத் தெரியப்படுத்தி விடவும். நீ என்னுடன் இனி எத்தகைய சம்பந்தமும் வைத்துக் கொள்ள மாட்டாயா? இன்னொரு விசேஷம். அதாவது நீ இப்போது உன் பெற்றோர்களுடைய யோசனையைக் கேட்டு அதன்படியே நடக்கிருய் என்று நினைக்கிறேன். ஆனல் பெற்றோர்களின் யோசனை எப்போதும் சரியாக இராது என்பதையும், நம்முடையமனதை அறிந்து அவர்கள்யோசனை சொல்ல மாட்டார்கள் என்பதையும் நீ மறந்துவிடக் கூடாது. நாம் இருவரும் முதலில் ஒருவரை யொருவர் விரும்பித் தழுவிய போது நான் எனது தாயாரின் யோசனையைக் கேட்டிருந்தால் அதற்கு அவள் சம்மதப்பட் டிருப்பாளென்ருவது, இப்போதாவது அதற்குச் சம்மதிப்பா ளென்ருவது நீ நினைக்கிருயா? அப்படியிருந்தும் நான் உன்னிடம் கொண்ட காதலுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்து விடுகிறேன். ஆகையால் நீ உன் பெற்றோர்களின் காலில் விழுந்து என் கூட்டுறவு இல்லாவிட்டால் உன் வாழ்க்கையே இன்பமானதாக இராது எனச் சொல்லி நமது விவாகத்துக்கு அனுமதி பெற்றுக் கொள். உன்னை மனமார நேசிக்கும் என் மனதுக்குக் கஷ்டம் தாராதபடி நடந்து கொள்வாய் என்றும், உன் அபிப்பிராயத்தை இக் கடிதம் கொண்டு வருபவர் வசம் சொல்லியனுப்புவாய் என்றும் நம்புகின்றேன்.

உனது அன்புள்ள ராஜேஸ்வரி.'

இக்கடிதம் முழுதையும் மோகன சுந்தரம் படித்ததும் அவன்மனதில் ஒருவித எழுச்சி தோன்றியது. தான் ராஜேஸ்

வரியின் விஷயத்தில் நடந்துகொண்ட மாதிரி தவறானது என்றும் உணர்ந்தான். ஆனால் மறு நிமிஷமே ராஜலட்சுமியின் உருவம் அவன் மனக் கண் முன் தோன்றியதும்; ஆ, அப்படிப்பட்ட ஒரு உத்தமியைப் பார்த்த பின்னரும் ராஜேஸ்வரியைப்போன்ற ஒரு பெண்மணியை மதிப்பதா என்று நினைத்தான். ஆகவே, அவன் அக் கடிதத்தைத் துண்டு துண்டாகக் கிழித்து எறிந்துவிட்டு அந்த ஆளைப் பார்த்து, 'நான் என் முடிவை மாற்ற முடியாதென்று தெரிவித்ததாக ராஜேஸ்வரியிடம் சொல்லிவிடு என்று சொல்லி விட்டு அந்த ஆளைத் திரும்பிப் பாராமலும் தன் மாளிகையை நோக்கிச் சரசரவென்று நடந்தான். சிறிது தூரம் வந்த பிறகு அவனுக்கு ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. அதாவது, தான் கிருஷ்ணகிரிக்குப் போனபோது ரங்கநாதம் பிரபுவின் மாளிகையில் அப் பிரபு சொல்லத் தான் எழுதிய கடிதத்தை ராஜேஸ்வரிக்கு அவர் சேர்ப்பிக்கவில்லையே என்பது தான். அக் கடிதம் அவளுக்குச் சேர்ந்திருந்தால் அவள் இப்படி எழுதியிருக்க மாட்டாளே என்று பலவாறு நினைத்தான். இதற்குள் அவனிருக்கும் மாளிகையும் வந்து விட்டது. வாயிற்படியிலேயே அவனுடைய தகப்பனாகிய மனோகரம் பிரபுவும் நின்றிருந்தார். தனக்கு எவ்வளவோ உதவிசெய்த அப் பெரியாரிடம் எதையும் மறைக்கவிரும்பாமல் அவன், கிருஷ்ணகிரியிலிருந்து ஆள் வந்ததையும், ராஜேஸ்வரி கடிதம் அனுப்பியதையும், தான் அதைக்கிழித்துப் போட்டதையும் விவரமாகத் தந்தையினிடம் கூறினான். அதற்கு அப்பெரியார், 'அப்பா! நீ புத்திசாலித்தனத்துடனும் ஜாக்கிரதையாகவும் நடந்துகொண்டதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன் மேலும் நீ எதையும் ஒளிக்காமல் என்னிடம் சொன்னதையும் நான் பாராட்டுகிறேன் அதற்குத் தக்கபலன் உனக்குக் கிடைக்கும்? என்று புகழ்ந்தார். அப்போது அவன், 'என

தன்புள்ள தந்தையே' அவள் கிடக்கட்டும்; அவளைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் என்னைத் தக்கபடி உபசரித்து எனக்குவேண்டிய உதவிகளைச்செய்த தாராள நோக்கமுடைய தியாகராஜனுக்காவது நான்கடிதம் எழுதவேண்டாமா? நீங்கள்யார் என்பதையும் இனி அவனுக்குத் தெரியப்படுத்தலாமல்லவா?'' என்று கேட்டான். அதற்கு அவர், 'குழந்தாய் அவசரப்படவேண்டாம். கூடியசீக்கிரத்தில் பகிரங்கமாகவே நான்யார் என்பதை எல்லாருக்கும் தெரிவிக்கக்கூடிய காலம் வரும். அப்போது தியாகராஜனுக்கும் தெரியப்படுத்திவிடலாம். அதுவரை சிறிது பொறுமையுடன்இரு' என்று சமாதானம் கூறினார்.

கிருஷ்ணகிரியில் ஹேமவதிசீமாட்டிக்கும், ராஜேஸ்வரிக்கும் ஏககாலத்தில் விவாகம் நடப்பதென்று குறிப்பிடப்பட்ட நாள் சமீபித்துவிட்டது. விவாகத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவந்தன. அதை ஆடம்பரமின்றியும் அதிகவிளம்பரமின்றியும் நடத்துவதென்றும், அவசியமாக வரவேண்டியவர்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்புவதென்றும் பகலில் முகூர்த்தம் நடந்ததும் உடனே ஹேமவதியும் அவளது கணவன் சந்திரசேகரமும் இரத்தினபுரிக்குப்போய் விடுவதென்றும், ராஜேஸ்வரியைத் தியாகராஜன் தன் மாளிகைக்கு அழைத்துக்கொண்டுபோய் விடுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது. விவாகநாள் சமீபித்துவிட்டபோது ஒருநாள் மாலை ராஜேஸ்வரி தன் பிரத்யேக அறையில் தனியே உட்கார்ந்திருந்தாள். ஹேமவதிசீமாட்டியோ அவளுடையபுஸ்தகசாலை அறையில் உட்கார்ந்துகொண்டு யாருக்கோ கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள். சந்திரசேகரம் அம்மாளிகையின் தோட்டத்தில் காற்றுவாங்கிக்கொண்டிருந்தான். அப்போது ராஜேஸ்வரியின்மனம் நிம்மதியில்லாமல் குழப்பமடைந்திருந்தது

தான் இரத்தினபுரிக்கு அனுப்பியஆளை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் என்ன பதில் கொண்டு வருகிறானோ அதைப்பொறுத்தே அவள் இனிஎன்ன செய் வது என்பதைத் தீர்மானிக்கவேண்டும். மோகனசுந்தரம் தன் விருப்பத்தை ஏற்றுக்கொள்வானென்றும், சிலமாதங்களுக்கு முன் அவர்களிடையே ஏற்பட்ட சம்பந்தத்தால் அவனுக் குத் தன்னிடம் மோகம் அப்படியே இருக்குமென்றும், முன்பு ஏற்பட்ட கூட்டுறவால் அவள் ஒன்று அல்லது இரண்டுமாத கர்ப்பிணியாகவும் இருக்கலாமென்றும் நம்பி னாள். ஒருகால் மோகனம் மறுத்துவிட்டால் தியாகராஜனைக் கலியாணம் செய்துகொள்வதைத் தவிர அவளுக்கு வேறு வழியில்லை. உண்மையில் தியாகராஜனும் அவளை மனமார நேசிப்பதுடன் அவளிடம் பூரணநம்பிக்கையும் கொண்டிருக் கிறான். மேலும் ராஜேஸ்வரி அவனைவிவாகம் செய்துகொண்டு விட்டால் பின்னர் பிரசவித்தாலும் அது தியாகராஜனுடைய குழந்தையே என்று பெயராகிவிடுமென்றும் நினைத்தாள். ஆக வே மோகனசுந்தரத்தையோ அல்லது தியாராஜனையோ மணக்கவேண்டும். அவள் இவ்வாறு யோசித்துக்கொண்டி ருக்கையில் இரத்தினபுரிக்குச்சென்ற ஆள் திரும்பிவந்துவிட் டான் அவன் திருப்திகரமான பதிலையேகொண்டு வந்திருக்க வேண்டுமென்றும், எப்படியாவது மோகனசுந்தரத்தையே தான் அடையும்பாக்கியம் பெறவேண்டுமென்றும் பிரார்த்தித் தாள்.

ராஜேஸ்வரி இருந்த அந்த அறைக்குள்வந்த அந்தஆள் ஒன்றும் பேசாமல் இருந்ததால் அவளாக, 'நீ அவனைப்பார்த் தாயா? எனதுகடிதத்தை அவன் படித்துப்பார்த்தானா? என்னபதில் கொடுத்திருக்கிறான்?' என்று பரிவுடன்கேட் டாள். அதற்கு அவன், 'அம்மா! நான் மிக்க சிரமத்தின்மீது

அவரைக்கண்டுபிடித்து அக்கடிதத்தைக் கொடுத்தேன். அவர் ஒரே ஒருவார்த்தையைச் சொல்லியனுப்பினாரேயொழிய பதில் எழுதிக் கொடுக்கவில்லை' என்றான். அப்போது அவள் மிக்க வருத்தத்துடன், 'வாய்ச்சொல்லா? என்ன சொல்லி யனுப்பினான். உடனே சொல்' என்று கேட்டாள். அதற்கு அவன், 'அம்மணி! தான்செய்த சோதனையின்முடிவு என்னமோ அதன்படியே நடப்பதெனத் தீர்மானித்திருப்பதாயும், இதை உன்னிடம் சொல்லிவிட்டால் நீ தெரிந்துகொண்டுவிடுவாய் என்றும்கூறினார்' என்றான். அவளும், ஆம், தெரிந்துகொண்டு விட்டேன்' என்று கூறிவிட்டுப் பல்லைக்கடித்துக்கொண்டு அதிக ஆத்திரப்பட்டாள். பிறகு அவள் அந்த ஆளிடம், 'அப்பா! நீ இவ்வளவு உண்மையுடன் நடந்துகொண்டதற்காக நன்றிசெலுத்துகிறேன். அதற்காக வாக்களித்தபடி இதோ சன்மானத்தை எடுத்துக்கொள். இதை இரகசியமாக வைத்துக்கொள். யாரிடமும் சொல்லாதே. மோகனம் எங்கு வசிக்கிறான். அவனுடைய பெற்றோர்கள்யார் என்பதையாவது, அவன் தங்கியிருக்கும்வீடு யாருடையதென்றாவது விசாரித்தாயா?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'அவ்வளவு விஷயங்களை விசாரிப்பதற்கு எனக்குச் சாவகாசமில்லை ஆயினும் அவர் ஒரு முதல்தரமான மாளிகையிலேயே தங்கியிருக்கிறார் என்பதையும், அம்மாளிகையின் சொந்தக்காரர் செல்வநாதர் என்றும் அறிந்துகொண்டேன்' என்றான். அதைக்கேட்டதும் அவள், 'ஓ, செல்வநாதரா! அதனால்தான் என் முயற்சிகளெல்லாம் தோல்வியுற்றன. அவர் எங்கள் குடும்பத்துக்கே ஒரு ஆபத்தாக முளைத்திருக்கிறார்' என்று கூறி அவனை அனுப்பிவிட்டாள்.

பின்னர் அவள் தனியாகச் சிறிதுநேரம் சிந்தித்தாள். உடனே அவள் அங்கிருந்து புறப்பட்டுத் தன் தாயார் ஹேம

வதிசீமாட்டி இருந்த அறைக்குச்சென்று தாயின் முன் நின்று, 'தாயே! சமீபத்தில் நீ உனது நண்பரான செல்வநாதரைப்பற்றி ஏதேனும் கேள்விப்பட்டாயா?' என்று கேட்டாள் அதற்கு அவள், 'என்நண்பா! இதென்ன இவ்வாறு கிண்டலாகக் கேட்கிறாய். அவனைப்பற்றி எனக்கென்ன கவலை? இப்போது நீ திடீரென்று இக்கேள்வி கேட்டதன் காரணம் என்ன?' என்று விசாரித்தாள். அப்போது ராஜேஸ்வரி, 'விசேஷம் ஒன்றுமில்லை. மோகனசுந்தரம் இப்போது அந்தச் செல்வநாதரிடம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதற்காகத்தான் விசாரித்தேன்' என்றதற்கு ஹேமவதி, 'அதைப்பற்றி எனக்கென்ன? மோகனசுந்தரம் சம்பந்தமான விஷயங்களெல்லாம் உனக்குப் பிரமாதமாகத் தோன்றலாம். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை' என்று தன்மகளைப் பரிகாசம் செய்யும்முறையில்பேசினாள். ஆகவே ராஜேஸ்வரி தன் தாயாரைப் பரிகாசம்செய்ய வேண்டுமென்னும் எண்ணத்துடன், அம்மா! உனக்கும் மோகனதாஸ் என்பவருக்கும் ஏற்பட்ட தகராறில் செல்வநாதர் தலையிட்டாரல்லவா? அவரிடம் இப்போது, உன்னிடம் ஒருகாலத்தில் வேலைசெய்த மோகனசுந்தரமும் தங்கியிருக்கிறான் என்றால் அதைப்பற்றி நீ தெரிந்துகொள்ள விரும்புவாய் என்று நினைத்தேன். மேலும் செல்வநாதர் வெளிநாட்டிலுள்ள மனோகரம் பிரபுவினிட மிருந்து வந்ததாகச் சொன்னாரே, மனோகரர் சந்திரசேகரம் பிரபுவின் சிற்றப்பனல்லவா? ஆதலால் செல்வநாதர் இப்போது நீ சந்திரசேகரம்பிரபுவை மணம்செய்து கொள்வதிலும் குறுக்கிட்டால் என்னசெய்வது என்று யோசிக்கிறேன்' என்று கூறினாள். அப்போது ஹேமவதிசீமாட்டி, 'அவன் குறுக்கிடுவானென்று நான் பயப்படவில்லை. ஏனென்றால் நான் சந்திர

சேகரம்பிரபுவினிடம் மோகங்கொண்டு அலையவில்லை. கலியாணம் நின்றுவிடுவதாகவே இருந்தாலும் அதற்காக நான் கவலைப்படப்போவதில்லை. மேலும் சந்திரசேகரம்பிரபு பிறருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து விடக்கூடிய அவ்வளவு இளம்பிராயத்தனுக இல்லை. அவன் தன் இஷ்டப்படி செய்யும் சுயேச்சை பெற்றவனுகவே இருக்கிறுன். அன்றியும் நமக்குக் கலியாணம் நடைக்கிறதென்று அவனுக்கு என்னதெரியும்" என்றுள்.

அதற்கு ராஜேஸ்வரி, 'அவர்களுக்குத் தெரியுமென்று நான் சொல்லவில்லை. ஆயினும் தெரிந்திருக்கலாமெனச் சந்தேகப்படக் காரணமிருக்கிறது. செல்வநாதரும் மோகனதாஸும் சில வாரங்களுக்குமுன்பு அதாவது அவ்விருமாதர்கள் கொல்லப்பட்டபோது இவ்விடம் இருந்தார்கள் என்பதையும், அவர்கள் இரத்தினபுரி சென்ற சில தினங்களுக்கெல்லாம், நமது மாளிகையில் இருந்த மதனவல்லிச் சீமாட்டியும், ஷண்பகவல்லியும் திடீரென்று போய்விட்டதையும் கவனிக்கும்போது அவனுடைய யோசனையின்மீதே அவர்கள் புறப்பட்டுவிட்டதாகவே நினைக்கவேண்டி யிருக்கிறது. மேலும் நமது தினகரனும் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தனக்கு ஷண்பகம் மனைவியாக ஆவதெனச் செய்திருந்த ஏற்பாடு முறிந்துவிட்டதென்றும், அதற்குக்காரணம் செல்வநாதரே என்றும் எழுதியிருக்கிறு னல்லவா? இதையெல்லாம் நினைக்கும்போது இன்னும் நமது விஷயத்தில் அவன் தலையிட்டு நம்மை அழிப்பதிலேயே அவன் கவனமுடையவனுய் இருக்கிறுன் என்பது நன்கு தெரிகிறதல்லவா?' என்று கூறினுள். பிறகு ராஜேஸ்வரி தன் அறைக்குச்சென்று அங்கிருந்த ஒரு ஆள்மூலம் இரத்தினபுரிக்குப் போய் வந்த சேவகன் மாளிகையிலேயே இருக்கி

ருனு அல்லது வெளியே போய்விட்டானு என்று விசாரித்த தில் அவன் மாளிகையிலேயே ஒருஅறையில் சாப்பிட்டுக் கொண்டிருந்ததாகத் தெரிந்ததால் அவனைக் கூப்பிட்டு, 'நான் உன்னை ஒரு கேள்விகேட்க மறந்துவிட்டேன். நீ அவனிடம் எனக்கும் தியாகராஜனுக்கும் விரைவில் விவாகம் நடக்கப் போகிறதென்னும் சங்கதியைத்தெரிவித்துவிட்டாயா,என்ன' என்று கேட்டதற்கு அவன், 'இல்லவே இல்லை. நான் அதை யெல்லாம் அவரிடம் சொல்லவில்லை' என்முன். பிறகு அவள், 'என்கடிதத்தை அவன் வெறுப்புடன் வாசித்தானு? அப் போது அவனுடைய மனேநிலைமை எவ்வாறு இருந்ததென்ப தை நீ யூகிக்கமுடியுமா?' என்று கேட்டாள், அதற்கு அந்த ஆள், 'உன்கடிதத்தைப் படிக்கும்போது அவாதுமனம் மாறி அவருக்கு உன்னிடம் அனுதாபம் ஏற்பட்டதென்றே கூற வேண்டும். ஆனல் உடனே அவர் அதையெல்லாம் அடக்கிக் கொண்டு சிந்தித்துப் பார்த்ததன் பயனுக அவ்வாறு பதில் சொல்லி அனுப்பிவிட்டார்' என்று தெரிவித்தான்.

அதைக்கேட்ட பின்னர் ராஜேஸ்வரி அந்த ஆளை அனுப்பிவிட்டாள். மோகனசுந்தரத்துக்குத் தான் தியாக ராஜனைவிவாகம்செய்துகொள்வது தெரியாததலாலும்,அவன் தன்னிடம் இன்னமும் அனுதாபமுள்ளவனுகவே காணப் படுவதாலும் அவனுல் தனக்கு எத்தகைய ஆபத்தும் வாரா தென்று நிச்சயமாக உணர்ந்தாள்? ஆயினும் மனம் நிம்மதி யடையவில்லை. ஏதோ ஒருவிதமான அச்சம் அவள்மனதில் புகுந்துகொண்டு அவளை வாட்டியது. சமீபத்தில் அவளுக்கு ஏற்படப்போகும் ஆபத்தை அவள் உணர்ந்துகொண்டால் எப்படி பயப்படுவாளோ அப்படியே பயந்தாள். தன்னை விவா கம் செய்துகொள்ளப்போகும் தியாகராஜனும் இப்பால் ஜங்

தாறு தினங்களாக முன்போல் ஆவலுடனும் அன்புடனும் நடந்துகொள்ளக் காணுமே என்று நினைத்து வருத்தப்பட்டாள். அன்று இரவு முழுதும் அவளுக்குத் தூக்கம் வரவே இல்லை. படுக்கையில் புரண்டுகொண்டே இருந்தாள். அடுத்த நாள் காலை அவள், தான் இவ்வாறு பயப்படுவது தவறென்றும், எப்படிப்பட்ட கஷ்டம் வருவதாயினும் அதைச் சமாளித்துக் கொள்ளக் கூடிய சக்தி தனக்கு உண்டு என்பதைத் தான் மறக்கக் கூடாதென்றும் கருதினுள். மறுநாள் விவாகமாதலால் இனி அம்மாளிகையில் தான் இருக்கப்போவதில்லை யென்றும், தியாகராஜனுடைய மாளிகைக்குத்தானே எஜமானியாகப் போவதாகவும் நினைத்தாள். அன்று இரவையும் அவ்வாறே அவள் தைரியத்துடனேயே கழித்தாள்.

மறுநாள் உதயமாயிற்று. அன்றுதான் விவாக முகூர்த்தம். அவள் தன்னை அலங்கரித்துக்கொண்டு காலை ஆகாரம் அருந்தும் அறைக்குச் சென்றுள். அங்கே ஹேமவதி சீமாட்டியும் சந்திரசேகரம் பிரபுவும் நல்ல உடைகளை அணிந்து கொண்டு பிரசன்னமா யிருந்தார்களென்றுலும் அவ்விருவருடைய முகத்திலும்கூட நல்ல பிரகாசமில்லாம லிருப்பதையும், ஏதோ பீதியடைந்தவர்கள்போல் இருப்பதையும் ராஜேஸ்வரி கண்டு கொண்டாள். அதற்குக் காரணம் யாதாயிருக்குமோ என்று சிந்தித்துப் பார்த்தாள். காலை ஆகாரம் முடிந்தது. அப்போது மணி ஒன்பது யிருக்கும். சரியாகப் பன்னிரண்டு மணிக்கு முகூர்த்த மாதலின் பதினொருமணிக்குமேல் எல்லாரும் வருவார்களாதலால் இன்னும் இரண்டுமணிநேரம் பொறுத்தே ராஜேஸ்வரியும், மற்றவர்களும் திருமண ஆடையை அணியலாமென்று யோசித்தார்கள். ஆகவே அவரவரும் தத்

தம் அறைகளுக்குச் சென்றனர். சரியாகப் பதினொரு மணிக்கு மேல் அழைப்பு அனுப்பப்பட்ட விருந்தினர் ஒவ்வொருவராக வந்து சேர்ந்தனர். பாக்கியம் தம்பதிகளும் வந்தனர். தியாகராஜனும் வந்தான். விவாகத்தை நடத்தவேண்டிய புரோகிதரும் வந்தார். எல்லாருமாகப் பத்து, பன்னிரண்டு பேர்கள் தான் கூடினர். பதினொன்று அடித்து நாற்பத்தைந்து நிமிஷங்களுக்கெல்லாம் புரோகிதர் விவாகச் சடங்கை ஆரம்பிக்கவா என்று கேட்டார். அப்போது தியாகராஜன், சரியாகப் பன்னிரண்டு மணிக்குத் தன்னுடைய முக்கிய நண்பர் ஒருவர் வரப்போவதாகவும், ஆகவே அவர் வந்ததும் ஆரம்பித்துவிடலாமென்றும் தெரிவித்தான். ஆதலால் எல்லாரும் காத்திருந்தார்கள். இதற்கிடையில் ராஜேஸ்வரி தியாகராஜன் அருகில் சென்று வரப்போகும் நண்பர் யார் என்று மன்றாடிக் கேட்டாள். அப்படியும் அவன் சரியானபதில் சொல்லாமல் வேறு எதையோ பேசிக் காலந் தள்ளினான். சரியாகப் பன்னிரண்டு மணிக்கு வரப்போவது யார் என்று தெரிந்து கொள்வதில் தான் அங்கிருந்தவர்கள் யாவரும் ஆவலுடன் இருந்தனர். மணி பன்னிரண்டு அடித்ததும், அவர்கள் உட்கார்ந்திருந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. உள்ளே ஒரு பெரிய பிரபு புகுந்தார். அம்மாளிகையின் சேவகன் அவருக்கு முன்னதாக அறையில் புகுந்து மனோகராம்பிரபு விஜயம் செய்திருக்கிறார் என்று உரத்தக் கூறினான்.

OFFICE OF THE REGISTRAR
6-NOV 1933
MADRAS

92-வது அத்தியாயம்.

எதிர்பாராத முடிவு.

அந்த அறையில் புகுந்தவரும், மனோகரம் பிரபு என்று விளம்பரம் செய்யப்பட்டுவருமான அந்தக் கனவானே செல்வநாதராக நடித்தார் என்பதை அறிந்ததும் ஹேமவதி சீமாட்டி, ராஜேஸ்வரி, சந்திரசேகரம் பிரபு ஆகியவர்களின் மனம் என்ன பாடுபட்டிருக்குமென்பதை நாம் வர்ணிப்பதை விட நாவல்கள் படித்து வர்ணனையில் சிறந்தவர்களாய்ப் போன நேயர்களே எளிதில் உணர்ந்து கொள்ளலாமென்று நம்புகிறோம். சந்திரசேகரம்பிரபுவின் சிற்றப்பனான மனோகரம் பிரபுவே இச்சமயத்தில் வந்துவிட்டதுடன் செல்வநாதராக நடித்துத் தங்கள் விஷயங்கள் பலவற்றையும் அறிந்துகொண்டு விட்டாரே என்று நினைத்து ஹேமவதியும் ராஜேஸ்வரியும் அஞ்சினர். சந்திரசேகரனோ, அவர் இன்னாரென்று முன்னரே அறியாமல் பலவிதமாகவெல்லாம் இழித்துப் பேசியும் அவமானப்படுத்தியும் கேவலமாக நடத்தினோமே என்று நினைத்து நடுங்கினான். ஆனால் இவ்வாறு மனோகரம் பிரபு வருகிறார் என்பதை ரங்கநாதம்பிரபுவும் அவரது மனைவி பாக்கியமும் முன்னமே அறிவார்களாதலால் அவர்கள் இருவரும் அப்பிரபுவின் கையைப்பிடித்துக் குலுக்கியதுடன் தியாகராஜனையும் அவருக்கு அறிமுகம் செய்துவைத்தனர். அங்குக் கூடியிருந்த மற்றவர்கள் அச்சம்பவங்களையெல்லாம் கண்டு ஆச்சரியப்பட்டார்களேயொழிய அவர்களுக்கு விளங்கவேயில்லை. சந்திரசேகரன் ஒருவாறு தைரியம் செய்துகொண்டு

தன் பந்துவை வரவேற்கும் முறையில் அவரிடம் சென்முன். அப்போது அவர், 'குழந்தாய், உன்னுடன் நான் கைகுலுக்கு வதற்குமுன் நீ என் கட்டளையையோ அல்லது யோசனையை யோ அங்கீகரிக்கக்கூடிய அடக்கம் வாய்ந்த பந்துதானு என் பதை நான் அறிந்துகொள்ளவேண்டும்' என்று கூறவே அவன் திடுக்கிட்டுப்போய் ஒன்றும் கூற முடியாமல் ஒரு மூலையில் உட்கார்ந்து கெண்டான்.

இதையெல்லாம் பார்த்த ராஜேஸ்வரி, மனோகாம்பிரபு வைப் பார்த்ததும், மோகனசுந்தரமும், அவனுடைய சகோ தரியும் அவருடைய மக்களாகத் தான் இருக்கவேண்டுமென்று நிச்சயித்து, அவருடைய வாயை அடக்குவதற்கு அவரு டைய குமாரி இந்திராபாய் என்னும் பெயருடன் கொள்ளைத் தொழிலை நடத்தியதை எடுத்துக் காட்டிவிட்டால் போது மென நினைத்து, உடனே தாயின் அருகில்சென்று மெதுவாக இவ்விஷயத்தை அறிவித்து விட்டாள். அதையறிந்ததும் ஹேமவதிசீமாட்டி, ஏதோ ஜெயித்து விட்டவள்போல் குதூ கலமடைந்து, உடனே மனோகாம்பிரபுவின் அருகில்சென்று, 'தியாகராஜனுடைய நண்பரான உம்மை நான் வரவேற் கிறேன்' என்று கூறிக்கொண்டே நாற்புறமும் பார்த்ததில் அவரவரும் தங்கள் தங்களுடைய கவனத்தை வெவ்வேறு இடங்களில் செலுத்தியிருப்பதை அறிந்துகொண்டு மெது வான குரலில், 'பிரபுவே, உம்முடைய குமாரியின் யோக்கி யதை எனக்குத் தெரிந்ததே, ஜாக்கிரதை' என்முள். இதைக் கேட்ட மாத்திரத்தில் அவருக்கு ஆத்திரம் அதிகரித்து விட் டது. ஆயினும் அவள் கூறியதைக் கேட்டும் மிக அலட்சியத் துடன் நடந்து கொண்டதால் தன்னை சட்டை செய்யவில்லை யென்பதை உணர்ந்த ஹேமவதி அவருடன் சமாசம் செய்து கொள்வதே சரியென நினைத்து, 'ஐயா! நானும் உமது பந்து

வாகிய சந்திரசேகானும் விவாகம் செய்து கொள்ளப் போவ தன் சம்பந்தமாய்ச் சில விஷயங்களை நான் உம்மிடம் அறி விக்க விரும்புகிறேன்,' என்றாள். அதற்கு அவர், 'இப்போது ஒன்றும் முடியாது. அதைப்பற்றிச் சாவகாசமாகப் பேசலாம் தற்சமயம் ஒரு ஆசனத்தில் அமர்ந்துகொள். நானும் அருகில் உட்காருகிறேன்' என்று சொன்னதும் அவள் ஓரிடத்தில் உட்காரவே அவரும் அவளருகில் உட்கார்ந்தார். தியாகரா ஜன் தன் அருகில் உட்கார்ந்து தனக்கு ஏதேனும் சமாதானம் கூறுவாரென்று ராஜேஸ்வரி ஆவலுடன் எதிர் பார்த்தும், அவன் வராததாலும், தன்தாயும் மனோகரம் பிரபுவினிடம் அடங்கிவிட்டதுபோல் தெரிந்ததாலும், பாவம்,' அவள் மனக் கிலேச மடைந்து முகத்தில் ஈ ஆடாதவண்ணம் உட்கார்ந் திருந்தாள்.

இச் சம்பவங்களெல்லாம் இரண்டொரு நிமிஷங்களில் முடிந்துவிட்டன. விவாக முகூர்த்தத்தை நடத்தக் காத்திருந்த புரோகிதர், விஷயங்களை யூகித்தறிந்து கொள்ளாமல் சடங்கை ஆரம்பிக்கலாமா? என்றார். தியாகராஜனுக்கு ஆத்திரம் வந்து விட்டது, 'இந்த ராஜேஸ்வரியுடனா எனக்கு விவாகம் செய்து வைக்கப்போகிறீர்' என்று வெறுப்புடன் கேட்டான். இதைக் கண்ட அங்கிருந்தவர்கள் இதில் ஏதோ விசேஷ மிருக்கிற தென்று அறிந்தார்கள். உடனே தியாகராஜன் பிரசங்கம் செய்ய ஆரம்பித்துப் பின்வருமாறு கூறினான்:— "சீமாட்டி களே, சீமான்களே,' நான் சொல்லப்போகும் விஷயத்தைக் கவனமாகக் கேளுங்கள். கள்ளங் கபடமற்ற, உயர்குலத்தில் பிறந்த ஒரு வாலிபன், ஒரு பெண்ணைக் காதலித்து, அவளை விவாகம் செய்துகொண்டு அவளுக்குத் தன் ஆஸ்தி பாஸ்தி களையும், குடும்பத்தின் கௌரவத்தால் ஏற்படும் அந்தஸ்தையும் அளிப்பதாக மனமார ஒப்புக் கொள்ளும்போது அப் பெண்

மணியும் எத்தகைய வஞ்சனையும் இல்லாமல், சூதுவாதுகள் செய்யாமமல், அவனையே இறைவனாக மதித்து நடக்கவேண்டியது உத்தமப் பெண்ணின் கடமையல்லவா? அதுதானே கற்புடைமையாகும். அதை விடுத்து அவள் அப்படிப்பட்ட ஒரு யோக்கியனை வஞ்சித்து, அவனைப் பெயருக்கு மட்டும் கணவனாக ஏற்று, அவனால் அடையக்கூடிய லாபத்தை மட்டும் அடைந்து, அவனை ஏமாற்றி, அவள் முன்னரே திருட்டுத்தனமாகக் காதலித்துவரும் ஒருவனைத் தன் ஆசையைத் தீர்க்கும் ஆசை நாயகனாக ஏற்றுக்கொள்வதென்று தீர்மானித்திருந்தால் அவளுடைய யோக்கியதையை நீங்கள் என்ன என்று நினைப்பீர்கள். அப்படிப்பட்ட பெண் யார் தெரியுமா? இப்போது என்னை விவாகம் செய்துகொள்ளப் போவதாகச் சொல்லும் ராஜேஸ்வரியே". இதைக் கேட்டதும் ராஜேஸ்வரிக்குச் சொல்ல முடியாத அவமானம் உண்டாய்விட்டது. முகத்தைக் கைகுட்டையால் மூடிக்கொண்டு கண்ணீர்விட்டு அழுதாள். அவ்விடத்தைவிட்டு ஓடிப்போக வேண்டுமென்று நினைத்தாளென்றாலும் அவளால் அசையவும் முடியவில்லை. தன்மகளுக்கு இவ்வாறு மானபங்கம் ஏற்பட்டதைக் கண்டு துக்கப்பட்டு, 'தியாகராஜா, போதும், நிறுத்து' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

அவன் இதற்கெல்லாம் சிறிதும் மனம் இரங்காமல், 'முடியாது. எவ்வளவு தூரம் பழிவாங்க முடியுமோ அவ்வளவும் வாங்கி விடுவது என்று தீர்மானித்திருக்கிறேன். என்னை மோசம் செய்த அவளை நான் சும்மா விடுவானா' என்று கூறிவிட்டு மறுபடியும் அங்கிருந்தவர்களைப் பார்த்து, 'அன்பர்களே! ராஜேஸ்வரியின் யோக்கியதை அவ்வளவுதான் என்று நினைத்திருக்கிறீர்களா? அவள் தன் கள்ளக் காதலனிடம் மோகம் மாத்திரம் கொண்டிருக்கவில்லை. சொற்ப காலத்துக்கு

முன்னரே அவள் அவனுடன் உடல் சம்பந்தமும் செய்து கொண்டு விட்டாள். அவன் யார், என்ன, என்பது பற்றி இப்போது நான் சொல்லத் தயாராக இல்லை' என்றான். இதைக் கேட்டதும் ராஜேஸ்வரி, 'ஐயோ, கெட்டேன். கெட்டேன். இனி உயிருடன் இருப்பதைவிட இறப்பதே மேல்,' என்று கூறிக்கொண்டே அவ்வறையை விட்டு ஓடினாள். அவள் தற்கொலை செய்து கொண்டு விடுவாளோ என்னும் பயத்துடன் அவளது தாயாரும் அவள் பின்னாலேயே ஓடினாள். அவர்கள் போய்விட்ட பின்னரும் தியாகராஜன் இந்த உண்மையை யெல்லாம் அவன் எப்படித் தெரிந்துகொண்டான் என்பதை விளக்கிக் கூறினான். அங்கு வந்திருந்தவர்களனைவரும் தத் தம்மிடம் போகப் புறப்பட ஆயத்தமாயினர் மனோகரம் பிரபுவும், இப்படிப்பட்ட குணத்தை யுடைய ராஜேஸ்வரியுடன் தன் குமாரனும் சம்பந்தம் வைத்துக்கொண்டானே யென்று சிறிது கவலைப்பட்டார். ஆயினும் அதை மறந்து, அங்கு ஓரிடத்தில் துக்கத்துடன் உட்கார்ந்திருந்த சந்திர சேகரனுடைய கையைப் பிடித்துக் கொண்டு, 'உன் அறைக்குச் செல்வோம், வா' என்று கட்டளையிட்டார். அவனும் அவரை அங்கு அழைத்துச் சென்றான். அங்கு அவர்கள் இருவர் மட்டுமே இருந்ததால் மனோகரம் பிரபு, தான் செல்வநாதராக வேடம் தரித்து வந்ததையும், அவனையும் தினகரனையும் முதலில் நாடகக் கொட்டகையில் சந்தித்ததையுமாகச் சொல்ல ஆரம்பித்து, அவர், சந்திரசேகரன், மோகனதாஸ், தினகரன், ஷண்பகவல்லி, ஹேமவதி சீமாட்டி, ராஜேஸ்வரி, மோகன சுந்தரம் இவர்கள் சம்பந்தமாகப் பல விஷயங்களையும் எவ்வாறு அறிந்தார் என்பதையும், தான் எவ்வாறு மோகனதாஸுக்குத் துணை புரிந்தார் என்பதையும் மற்றும்

பல விஷயங்களையும் ஆதியோடந்தமாகச் சொன்னார். மேலும் அவர் ஹேமவதி சீமாட்டி, ராட்சஸ குப்பனுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருப்பதையும், மற்றும் அவள் எப்படிப்பட்ட அயோக்கிய மாது என்பதையும் நன்கு விளக்கிக்காட்டி, சந்திரசேகரம் அவளிடம் மோகங் கொண்டு அவள் பின்னால் அலைவது எவ்வளவு ஆபத்தாக முடியு மென்பதையும் தெளிவாகக் கூறினார். அன்றியும் அவர், தான் இனியும் ஹேமவதியை விடப்போவதில்லை யென்றும், அவளே மோகனதாஸை மோகித்துத் தன் ஆசையைத் தீர்க்கும்படி கேட்டும் அவன் யோக்கியனா யிருந்து சம்மதிக்காததால் அவன் மீது பழி போட்டுவிட்டா ளென்பதையும் கூறி, அப் பழியை நிவர்த்திப்பதற்காக அவளிட மிருந்து உண்மையை எழுதி வாங்கிக் கொள்ளப் போவதாகவும் தெரிவித்து, இனி சந்திர சேகரம் அவளை அடியோடு மறந்து, சீர் திருந்தி தான் சொல்லுகிறபடி நடக்க வேண்டுமென்றும் கூறினார்.

தனக்கும் தெரியாத பல விஷயங்களை யெல்லாம் அப் பெரியார் மூலம் கேட்ட சந்திர சேகரன் ஆச்சர்ய மடைந்து, இனி நல் வழியில் திரும்பிச் சிற்றப்பாவின் சொற்படி நடப்பதே நலமென நினைத்து அவ்வாறே செய்வதாக உறுதி கூறினான். ஆகவே அவர், தான் மட்டும் தனியே போய் ஹேமவதியைச் சந்தித்துப் பேசிவிட்டு வருவதாகவும், அவன் தன்னுடன் ஊருக்குப் புறப்படத் தயாராக வேண்டுமென்றும் சொல்லிவிட்டு அவர் ஹேமவதி இருக்கும் அறையைத் தேடிச் சென்றார். இதற்குள் சந்திர சேகரனும், இனி யோசிப்பதில் பயனில்லை யென்றும், ஹேமவதி சீமாட்டியை மறந்து அப் பெரியாருடன் போய் விடுவதே நலமென்றும் முடிவு செய்து, தன் சாமான்களை யெல்லாம் மூட்டை கட்ட ஆரம்பித்தான்;

மனோகார் ஹேமவதி சீமாட்டியைத் தேடிக்கொண்டு போனார். அவள் புஸ்தகசாலை அறையில் இருந்ததால் அங்குச் சென்று அவளைச் சந்தித்தார். அப்போது அவள் கலியாண உடையில் இல்லை. சாதாரண உடையை அணிந்துகொண்டு மிக்க கவலையுடன் உட்கார்ந்திருந்தாள். மனோகார் போகும் போதே, தான் மிக்க மனோ தைரியமுடைய ஒரு மாதுடன் சமாளிக்க வேண்டி யிருக்கிறதென்று உணர்ந்தே அவளை எப்படியாவது அடிபணியச் செய்ய வேண்டுமென்னும் திடமான எண்ணத்துடன் போனார். ஆகவே சீமாட்டியைக் கண்டதும், 'நான் இப்போது உனக்கு என்ன கட்டளை யிடப்போகிறேன் என்பதை நீ அறிய மாட்டாயோ?' என்று கேட்டார். மனோகரம்பிரபு எவ்வளவுதூரம் தங்களுடைய சமாசாரங்களை யெல்லாம் தெரிந்து கொண்டிருக்கிறார் என்பதைடாவது அறிந்துகொண்டுவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன், 'ஐயா, நீங்கள் என்ன அதிகாரத்தைக் கொண்டு இவ்வாறு கட்டளை யிடப் போகிறீர் என்பது எனக்கு முதலில் தெரிய வேண்டும். மேலும் மோகன சுந்தரத்துக்கும் அவனது சகோதரிக்கும் நீரே தந்தையாயின் ராஜேஸ்வரிக்கும், உன் குமாரனுக்குமிடையில் நடந்த விவகாரங்களைப் பற்றிக் கவனிக்கத் தாங்கள் வரவில்லை யென்றே நினைக்கிறேன். உமது குமாரியின் யோக்கியதை எனக்குத் தெரியுமாதலால் நீங்கள் என்னை அதிகமாக எதிலும் வற்புறுத்த முடியாது' என்றாள். அப்போது அவர், 'நான் என் குமாரன் சம்பந்தமாய்ப் பேச வரவில்லை. நீயும் சந்திர சேகரனும் செய்துகொள்ளவிருந்த விவாகத்தைத் தடுக்கவே வந்தேன். மேலும் என் குமாரியைப் பற்றி நீ ஏதோ சொல்கிறாய். அதற்கெல்லாம் நான் சிறிதும் கவலைப்படவில்லை. நான் எல்லாவற்றையும் நன்கு விசாரித்து உண்மையை அறிந்து கொண்டிருக்கிறேன். அவள் வெட்கப் படவேண்டிய சந்தர்ப்பம் எதுவும் இல்லை. நீ உன் பவுண்டன்

186584

பேனவை எடுத்து ஒரு காகிதத்தில், மோகனதாஸ் மீது நீ போட்ட பழி பொய்யென்றும், நீயே அவனை மோகித்ததாக வும் எழுதிக் கொடு. இல்லா விட்டால் உனக்குப் பல கஷ்டங் கள் நேரிடும். எழுதிக்கொடுத்தால் அத்துடன் உன்னை விட்டு கிறேன்' என்று கூறினர்.

அதைக் கேட்டதும் சீமாட்டி, 'மோகனதாஸ்,' எப் போதும் நீர் அவனைப்பற்றியே சிபார்சு வருகிறீர். அது பழைய கதையல்லவா? இப்போது அதைப்பற்றி யென்ன? நான் அவ்வாறு எழுதிக் கொடுக்கா விட்டால் நீர் என்ன செய்ய முடியும்' என்ருள். அதற்கு அவர், 'சரி. உன்னுடன் பேசிக்கொண் டிருப்பதில் பயனில்லை. எனக்கு உன் சங்கதி கள் எல்லாம் தெரியும். நீ முகமூடி யணிந்த விருந்துக்குச் சென்று சந்திரசேகரனை மயக்கி அவனைக் கொண்டு மோகன தாஸுடன் துப்பாக்கிச் சண்டை செய்யச் செய்ததையும், கேவலம் ராட்சஸ குப்பன் போன்ற அரக்கர்களுடன் நீ கடி தப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருப்பதையும், அவன் மூலம் எங்களைக் கொல்ல முயற்சி செய்ததையும், நான் அறி வேன். இது மட்டுமா! உன் மனச் சாட்சியையே கேட்டுப் பார். உன்னுடைய குற்றங்களெல்லாம் உனக்கே தெரிய வரும். அவற்றை யெல்லாம் நானறிவேன்' என்ருர். இதைக் கேட்ட ஹேமவதி சீமாட்டி உண்மையிலேயே பீதியடைந்து. 'பிரபுவே, என்னை வீண் தொந்தரவில் வைக்க வேண்டாம். நான் நீங்கள் கேட்டபடியே எழுதிக் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். அதைக் கொண்டு நீங்கள் செய்யப் போவ தென்ன?' என்ருள். அதற்கு அவர், 'நான் உன் மீது வழக் குத் தொடரப் போவதில்லை. நீ யார் யாரிடம் மோகன தாஸைப் பற்றித் தவருகச் சொல்லியிருக்கிருயோ அவர்க ளிடம் மட்டும் இதைக் காண்பித்து உண்மையை விளக்கிவிடு

வேன்' என்று கூறவும், அவள், 'ஆ, அது போதாதா? யாருடைய மதிப்பு எனக்கு அவசியம் வேண்டுமோ அவர்களுக்கு என் யோக்கியதை தெரிந்து விட்டால் பிறகு என் வாழ்க்கை எதற்குப் பிரயோசனம். எனினும் வேறு வழி யில்லாததால் எழுதிக் கொடுக்கிறேன். என்ன எழுத வேண்டுமென்பதைச் சொல்லுங்கள்,' என்றாள். பெரியாரும் சொல்ல அவளும் எழுதினாள். அக் கடிதத்தை அவர் வாங்கி சட்டைப் பையில் வைத்துக் கொண்டார். அவர் அவளுடன் வேறு ஒன்றும் பேசாமல் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். சந்திரசேகரன் அவனுடைய அறையில் தயாராகப் புறப்படக் காத்திருந்ததால் அவனையும் அழைத்துக்கொண்டு வெளியில் காத்திருந்த தமது சொந்த வண்டியில் ஏறிக்கொண்டு புறப்பட்டார்.

அவர் போன பின்பு ஹேமவதி தனியாகவே அவ்வறையில் இருந்தாள். அவள் சொற்ப நேரம் வரை அங்கேயே இருந்து தன் நிலைமையைப் பற்றி அதிகம் சிந்தித்தாள். இனி இவ்வுலகத்தில் வாழ்வதைவிட இறந்து விடுவதே மேலென்று நினைத்தாள். உலக விஷயங்களிலெல்லாம் அவளுக்கு வெறுப்பு அதிகமாய் விட்டது. இறந்து போனாலும் தான் செய்த அக்கிரமங்களுக்கும், பாவங்களுக்கும் தண்டனையாக நரகத்தில் என்னென்ன கஷ்டங்கள் அனுபவிக்க வேண்டி வருமோ என்று நினைத்து அப்போதே அஞ்சினாள். பிறகு அவள் அங்கிருந்த மணியை அடித்ததும், ஒரு சேவகன் அவ்வறையில் நுழைந்தான். அவனைக் கண்டதும் சீமாட்டி, 'மனோகரம் பிரபு போய் விட்டாரா? சந்திர சேகரம் என்ன செய்கிறான்?' என்று விசாரித்தாள். அதற்கு அவன், அம்மா, அப் பிரபுவுடன் சந்திர சேகரமும் போய்விட்டார். அவர்களுக்கென்று வெளியே ஒரு வண்டி காத்திருந்தது. ஏறிக் கொண்டு கிருஷ்ணகிரிக்குள் சென்றார்கள். மனோகரர் தாம்

சந்திர சேகரத்துடன் விரைவில் இரத்தின புரிக்குச் செல்வ தாகப் பாக்கியம் தம்பதிகளிடம் சொன்னதை நான் கேட்டேன்,' என்று பதில் கூறினன். பிறகு அவள், விருந்துக் கென்று வந்திருந்தவர்களெல்லாம் என்னசெய்தார்களென்று விசாரித்த போது அவர்கள் யாவரும் போய் விட்டார்கள் என்று தெரிந்து கொண்டாள். பின்னர் அவள் அச் சேவக னுடன் ஒன்றும் பேசாமல் ஜன்னல் வழியாக எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்ததால் அச்சேவகன் போய்விட்டான். பிறகும் அவள் சிறிது நேரம் அங்கேயே தனியாக இருந்து யோசித்ததில் தான் முன்பு யோசித்தபடி இவ்வுலகில் இருப் பதைவிடத் தற்கொலை செய்து கொண்டு இறந்து விடுவதே நலமெனத் தீர்மானித்தாள். தன் முடிவைத் தன் மகளிடம் சொல்லி அவளுடைய நிலைமை என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன் ராஜேஸ்வரியின் அறைக்குச் சென்றாள்.

அங்கே ராஜேஸ்வரி, தன்னுடைய விவாக ஆடைகளை யெல்லாம் களைந்துவிட்டு வேறு சாதாரண உடையை அணிந்து கொண்டு ஒரு சாய்வு நாற்காலியில் துக்கத்துடன் சாய்ந்திருந் தாள். அவள் மெய்ம்மறந்து படுத்திருந்ததால் ஹேமவதி சீமாட்டி வந்திருப்பதும் அவளுக்குச் சொற்பநேரம் வரை தெரியவில்லை. ஆகவே சீமாட்டியே பேச ஆரம்பித்து 'ராஜேஸ்வரி,' என்ன செய்யப்போகிறாய்?' என்று கேட்டாள். அப்போது யாரோ பேசும் சத்தம் கேட்கவே திடீரென்று அவள் விழித்துக் கொண்டவள்போல் உணர்ச்சிபெற்றுப் பார்க்கவே தாயார் எதிரில் நின்றிருப்பதை யறிந்து' 'தாயே, நீ ஏதேனும் கேட்டாயா?' என்று கேட்க, ஹேமவதி சீமாட்டி, 'ஆம், நீ என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டேன்' என்றாள். அதற்கு ராஜேஸ்வரி, 'அம்மா,' என்ன

செய்வது? எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே, இந்த இரண்டு, மூன்று மணிநேரமாக நான் படும்பாட்டை என்ன வென்று உரைப்பேன். நான் இனி இவ்வுலகில் வாழ்வதை விடத் தற்கொலையேனும் செய்துகொண்டு வானுலகம் சென்று இறைவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதே நலம் என்று தோன்றுகிறது. அம்மா, நீ என்ன செய்யச் சொல்கிறுய்? என்று கேட்டாள். அதற்கு ஹேமவதி, 'நான் முன்பே ஒரு முறை உன்னை வந்து பார்த்தேன். அப்போது நீ ஸ்மரணை யின்றிப் படுத்திருந்தாய். நான் என் அறைக்குப்போய் வரலா மெனச் சென்றேன். இதற்குள் மனோகரம்பிரபுவே அங்கு வந்து என்னைச் சந்தித்தார். 'அடே, அப்பா' அவர் என்ன தெரியுமா? என் சங்கதிகளை யெல்லாம் நன்கு விசாரித்துத் தெரிந்துகொண்டு விட்டிருக்கிறுர். நான் அவர் இஷ்டப்படி செய்யாவிட்டால் உடனே போலீசாரிடம் ஒப்படைத்து விடுவதாக மிரட்டினுர்' என்றதும் ராஜேஸ்வரி, 'நீ என்ன செய்ய வேண்டுமென்று அவர் கேட்டார்' என்று விசாரித் தாள்.

அதற்கு ஹேமவதி, 'நான், மோகனதாஸ் மீது கூறிய பழி பொய் என்றும் நானே அவன்மீது மோகித்து அவனை அழைத்ததாகவும், அவன் இஷ்டப்படாததால் நான் அவ னைப் பற்றித் தவறுகப் பிரசாரம் செய்ததாகவும் எழுதிக் கொடுக்க வேண்டுமென்றும், நான் யார் யாரிடம் அவனைப் பற்றிக் கேவலமாகச் சொல்லியிருக்கிறேனே அவர்களிடம் மட்டும் அதை அவர் காண்பிப்பதாகவும் மற்றப்படி என்னை எவ்வித தொந்திரவும் செய்வதில்லை யென்றும் சொன்னுர். நானும் எழுதிக் கொடுத்துவிட்டேன். மனோகார் சந்திரசேகா னையும் அழைத்துக் கொண்டுபோய் விட்டார். நமது வீட் டுக்கு வந்திருந்தவர்களெல்லோரும் போய் விட்டார்கள்'

என்று விவரமாகக் கூறினாள். அப்போது ராஜேஸ்வரி, 'தாயே,' இதைவிட வேறு அவமானம் என்னவேண்டும் சந்திரசேகரனும் தன் சிற்றப்பனிடம் அவன் உன்னுடன் இன்பத்தை அனுபவித்து விட்டதாகக் கூறி விடுவானல்லவா?' என்றாள்' அதற்குச் சீமாட்டி, 'ஆம்; எல்லாம் சொல்வான். ஆதலால் நான் ஒருவித முடிவுக்கு வந்துவிட்டேன்' என்றாள். உடனே மகள் அவனுடன், 'என்ன முடிவு, நானும் ஒருவித முடிவுக்கு வந்துவிட்டேன்' என்று சொன்னதும் இருவருடைய மனமும் ஒன்றோடொன்று பேசிக் கொண்டதுபோல் இருவரும் ஏககாலத்தில், 'நான் உன் முடிவை அறிந்துகொண்டேன்' என்று பரஸ்பரம் சொல்லிக் கொண்டார்கள். இருவரும் தற்கொலை செய்துகொண்டு இறப்பது என்னும் முடிவுக்கு வந்தார்கள். ஹேமவதிசீமாட்டி தன் மகளிடம், 'பெண்ணே,' நான் ஒரு காலத்தில் எவ்வளவு கௌரவத்துடனும் அகங்காரத்துடனும் இருந்தேன் தெரியுமா? நான் பாலியத்திலேயே விதவையாய்ப் போனேனென்றாலும் என் மக்களாகிய உங்களையெல்லாம் நல்ல அந்தஸ்தில் வைக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் யாரையும் மறுவிவாகம் செய்து கொள்ளாமலும், ஆடவர்களைப் புறக்கணித்தும் என் வாழ்க்கையைக் கம்பீரமாக நடத்தியபோது பல பெரியவர்களெல்லாம் என்னைக்கண்டு பயந்தார்கள். கடைசியில் புத்தி தடுமாறி மோகனதாஸ் இடம் மோகங்கொண்டேன். அவன் நல்ல யோக்கியனாதலால் வழிக்கு வரவில்லை. அத்துடன் நின்று விட்டிருக்கலாம். நான் சும்மா இராமல் அவனைப்பற்றியும் பொய்யாக அவதூறு கூறியதுடன் அவனைக்கொல்லசசூழ்ச்சி செய்ததில் கேவலம் சந்திரசேகரனைப் போன்ற ஒரு அயோக்கியனுக்கு என் மானத்தை ஒப்படைக்க வேண்டியதாயிற்று.

இப்போது நான் பிறர் பார்வையில் மகா கேவலமாக வாழ்வதை விடத் தற்கொலை செய்து கொள்வதே நலம்' என்றாள்.

அதைக்கேட்ட ராஜேஸ்வரி, 'தாயே ஆயுளில் பாதி காலத்தை முடித்துவிட்ட உன் நிலைமையே இவ்வாறென்றால் வாலிபப் பருவத்திலேயே உள்ள என்னைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? எனக்கு இன்னும் கலியாணமே ஆகவில்லையே; இனிமேல் என்னை யார் கலியாணம் செய்து கொள்வார். சாதாரணமாக என் வயதுடைய பெண்களும் என்னுடன் சேரச் சம்மதிக்க மாட்டார்களே, ஆதலால் நான் இந்த உலகத்தில் வாழ்வதா?' என்றாள். அப்போது ஹேமவதி, 'ஆம், உன்னுடைய நிலைமையும் கேவலமே. நீ அதிகம் சொல்ல வேண்டியதில்லை. நாம் இருவரும் சேர்ந்து இறந்துவிட வேண்டியது தான். மரணத்திலும் இருவரும் ஒன்றாக இருந்தோம் என்னும் திருப்தியாவது ஏற்படும்' என்றாள். பிறகு தாயும் மகளும் ஒரே சோபாவில் உட்கார்ந்து கொண்டு மெதுவான குரலில் ஏதோ பல விஷயங்களைப் பற்றிப்பேசி விட்டுப் பிரிந்தனர். தாங்கள் இவ்வித முடிவுக்கு வந்தது வீட்டிலும் யாருக்கும் தெரியக் கூடாதென்றும், தற்கொலைக்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் சீமாட்டி செய்வதாகவும், இருவரும் கடைசிவரை மனம் தளராமல் இருந்து இவ்வுலகத்தை விட்டு ஒழிய வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டனர். அப்போது மாலை ஆகாரத்துக்குரிய மணி அடிக்கப்பட்டது. தாயும் மகளும் வெவ்வேறு பக்கமாகச் சமயலறைக்குச் சென்று ஆகாரமருந்தினார்கள். பகலிலேற்பட்ட சம்பவங்களால்மகளும் அவமானமடைந்ததாயும் தங்கள் ஆட்களின் முகத்தையும் பார்க்க வெட்க மடைந்தார்களென்றாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், அன்று ஒன்றுமே நடந்திராவிட்டால் எப்படி யிருந்திருப்பார்களோ அப்படியே இருந்து விட்டது

கண்டு சேவகர்களும் ஆச்சர்யப்பட்டனர். ஆகாரம் முடிந்த பின்னர் சுமார் ஒன்பது மணிக்கு ராஜேஸ்வரியும், ஹேமவதி சீமாட்டியும் அவரவர் படுக்கையயைக்குச் சென்றார்கள்.

அன்று இரவு சுமார் பதினொரு மணிக்குமேல் ஹேமவதி சீமாட்டி இரகசியமாகத் தன் தேகத்தைப் போர்வையால் மூடிக்கொண்டு தன் அறையினின்றும் புறப்பட்டாள். அவள் மெதுவாக மாளிகையை அடுத்த மடத்தின் வாயிலுக்குச் சென்றாள். அங்கே ராஜேஸ்வரியும் வந்திருந்தாள். இருவரும் பரஸ்பரம் ஒருவரை யொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டனர். பின்னர் அம் மடத்தில் நுழைந்து அதன் ஓர் அறையில் தனித் தனி ஒவ்வொரு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு அவ்வறையிலேயே புகை போட்டு விட்டார்கள். அப் புகையால் திக்கு முக்காடி இருவரும் இறந்து போக வேண்டு மென்பது அவர்களுடைய அபிப்ராயம். அப் படியே புகை அவர்களுடைய மூச்சை அடைத்து அவர்களைச் சாய்க்கும் தருணத்தில் படாரென்று கதவைத் திறந்து கொண்டு யாரோ ஒருவன் உள்ளே நுழைந்தான். ராஜேஸ்வரி மூர்ச்சையாய் இருந்ததால் அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை. ஹேமவதி சீமாட்டி மட்டும் அவ்வாறு நுழைந்தவன் ராட்சஸ குப்பன் என்று அறிந்து கொண்டாள். அவன் அறையின் கதவைத் திறந்து விட்டதால் புகைகள் யெல்லாம் வெளியே போய்விட ஆரம்பித்தது. அதனால் தெளிவடைந்த ராஜேஸ்வரி, 'தாகம், தண்ணீர் வேண்டும்' என்று கத்தினாள். கண் திறந்து பார்த்தாள். யாரோ ராட்சஸன்போல் ஒருவன் நிற்பதைக் கண்டாள். ஹேமவதி அவளை உடனே கையைப் பிடித்து மெதுவாக அவளது அறைக்கு அழைத்துச் சென்று சிறிது மதுபானம் அருந்தக் கொடுத்து அங்கேயே தூங்கும் படி சொல்லிவிட்டு மறுபடியும் மிக அவசரமாக மடத்துக்

குச் சென்று ராட்சஸ குப்பனுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து உடனே அவ்விடத்தை விட்டுப் போகும்படியும், பின்னல் அவசியமாகும்போது அவனை வரவழைப்பதாகவும் கூறி அனுப்பி விட்டு, அவ்வறையில் ஒன்று மில்லாதபடி சுத்தம் செய்து விட்டுத் தன் அறைக்குள் போய் விட்டாள்.

இதற்குள் சிறிது புகை வெளியே வந்ததால் மடத்தில் ஏதோ பற்றிக் கொண்டது என்று நினைத்துச் சிலசேவகர்கள் அங்கே போய்ப் பார்த்தார்கள். ஆனல் அங்கு ஒன்றும் இல்லை. அதை அவர்கள் சீமாட்டியிடம் தெரிவித்தார்கள். அவளும் ஒன்றும் அறியாதவளைப் போல் எல்லாம் கேட்டு விட்டு அவர்களை அனுப்பிவிட்டாள். மறுநாள் காலை சீமாட்டி தன் குமாரியிடம் சென்று, 'பார்த்தாயா,' இறக்க மனம் வருவதில்லை. பாதி திக்கு முக்காடும்போதே ஐயையோ என்று அடித்துக் கொள்கிருேம். கஷ்டம் தாங்க முடியாமல் தான் கதவைத் திறந்துவிட்டேன்' என்றுள். அன்று பகல் தாயும் மகளும் சுந்தரவிலாச மாளிகையை விட்டுப் புறப்பட்டு அந்நாட்டையே விட்டு வெளியேறி வேறு தேசம் போய் விட்டனர். சில வருஷங்களாவது தலை மறைவாக இருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பியதாலேயே அவ்வாறு சென்றனர்.

இவ்வாருக ஒழுக்கங்கெட்ட தாயும் மகளும் என்ன கதியை அடைந்தார்கள் பார்த்தீர்களா! விலக்கப்பட்டதும், தவருனதுமான காரியங்களைச் செய்யும்போது ஆரம்பத்தில், இன்பமாகத்தான் தோன்றும்; ஆனல் நாளடைவில் தண்டனை ஏற்படுமென்பது நிச்சயம்.

93-வது அத்தியாயம்.

துஷ்டர்களின் துர்ச்செய்கை

ஒருநாள் இரவு சுமார் பத்துமணிக்கு ராட்சஸகுப்பன் இரத்தினபுரியின் மற்றொரு மூலையிலுள்ள மிக ஆபாசமான பிரதேசத்திலிருந்த ஒரு வீட்டில் நுழைந்து ஜெயசிங் இருக்கின்றானா என்று விசாரித்தான். அங்கிருந்த வேறு சிலர் அவன் வெளியில் எங்கேயோ போயிருப்பதாகவும் சற்று நேரத்தில் திரும்பி வருவானென்றும் கூறினர். சிறிது நேரம் குப்பன் காத்திருந்ததில் ஜெயசிங் வந்ததும் இருவரும் தனியாக ஒரு அறைக்குச் சென்றார்கள். குப்பன் ஜெயசிங்கினிடம், 'எனக்கு ஏதேனும் கொண்டுவந்தாயா?' என்று கேட்டதற்கு அவன், 'ஒன்றும் இல்லை. உனக்குக் கடிதம் ஏதுவும் வரவில்லையென்று அந்தக் கோபாலன் கூறுகிறான். நான் என்ன செய்வேன்?' என்றான். அதற்கு குப்பன், 'ஓ, இதில் ஏதோ விசேஷமிருக்கிறது. அச்சீமாட்டி எனக்குக் கடிதம் எழுதாமல் இருக்கமாட்டாள். கோபாலன் ஏதேனும் துரோகம் செய்கிறானோ என்று எனக்குச் சந்தேகமாய் இருக்கிறது. இப்பால் சில துப்பறியும் உத்தியோகஸ்தர்களும் என்னைப் பின்பற்றி வருகிறார்கள். அவன் தான் ஏதாவது உளவு சொல்லி விட்டிருப்பான் என்று நினைக்கிறேன். அவனைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?' என்றான். அப்போது ஜெயசிங், 'கோபாலனுக்கு வேண்டியதெல்லாம் பணம்தான்-சில துப்பறியும் உத்தியோகஸ்தர்கள் கோபாலன் தம்பதிகள் வீட்டுக்கு வருவதை நானும் பார்த்தேன். ஆகையால் அவன் ஏதேனும் துரோகம் செய்வதாக இருக்கலாம். ஆயினும் அவனைக் கேட்டால் நீ மரகதத்தைக் கத்தியால் குத்தியது முதல் சிலர்

உன்னைத் தேடிவருவதாகவும் தனக்கு யாதொன்றும் தெரியாதென்றும் கூறுகிறான்' என்றான். அதைக்கேட்ட ராட்சஸகுப்பன், 'பார்த்தாயா,' எனக்குக் கோபாலன்மீது சந்தேகம் தான். அவன் பணத்துக்கு ஆசைப்பட்டு என் சங்கதிகளைச் சொல்லிவிட்டிருப்பான். ஆதலால் நாம் இருவரும் சேர்ந்து ஒரு வேலைசெய்ய வேண்டியதாய் இருக்கிறது. நீ இதில் எனக்குத்துணை இருப்பாய் என்று நம்புகிறேன்' என்றான். அப்போது ஜெயசிங், 'அதிருக்கட்டும், நீயும் மரகதமும் அவ்வளவு சினேகமாய் இருந்தீர்களே, ஏன் அவளைக் கொலை செய்ய முயற்சித்தாய்?' என்று கேட்டான்.

அதற்கு ராட்சஸகுப்பன் பதில் அளிக்கையில்:— அதை என் கேட்கிறாய்' அவள் என் உயிருக்கே உலை வைத்துவிட்டாள். அதிலும் கோபாலன் அவளுடன் கலந்து கொண்டிருப்பான் என்றே நம்புகிறேன். ஒருநாள் இரவு நான் கோபாலனுடைய மாடிமீது இருவரைக் கொல்ல முயற்சித்த போது மரகதம் எனக்கே வழிவைத்து விட்டாள். மாடிமீது அறையின் தரையில் ஒரு பலகையை வைத்து, வேறு ஒரு இடத்திலிருந்து அழுத்தினால் அப்பலகை நகரும்படிசெய்து அதன்மீது நின்றவர்கள் கீழே பள்ளத்தில் விழுந்து சாகும் படி ஏற்பாடு செய்திருந்தேன். எப்படியோ ஏமாற்றி நான் கொல்ல நினைத்த இருவரும் அங்கு வரும்படி செய்தேன். இச்சங்கதி பூராவும் மரகதத்துக்குத் தெரியும். அவள் என்ன காரணத்தாலோ நான் அப்பலகையின்மீது நின்றிருந்தபோது அதைத் திடீரென்று அழுத்திவிட்டபடியால் நான் அப் பள்ளத்தில் விழுந்தேன். நான் இனி இறக்கவேண்டியது தான் என அவர்கள் முடிவுசெய்து அப்பலகைக்குப் பதிலாகக் கற்களால் அவ்வாயிலையும் அடைத்து விட்டார்கள். அதை அடைப்பதில் கோபாலனும் மரகதத்துக்குத் துணையாக

இருந்தான். நல்ல காலமாக நான் அப்பாதாளக் கிணற்றில் இருந்த ஒரு கல்லின்மீது நின்றிருந்து அவர்கள் எல்லாம் போனபிறகு மெதுவாக அக்கிணற்றுக்கு ஆங்காங்கு இருந்த பொந்துகளின் வழியே ஏறிவந்து என்கையில் இருக்கக்கூடிய குண்டாந்தடியால் தட்டி அவர்கள் அப்போதுதான் கட்டிய கற்களை நகர்த்தித்தள்ளி மேலே வந்துவிட்டேன். அப்போது நான் மறுபிறப்பு அடைந்தவனாகவே நினைத்தேன். மிக்க அயர்ச்சி யடைந்திருந்தேன். அப்படியே நான் கோபால னுடைய படுக்கையறைக்குச் சென்றேன். அப்போது இரவு ஒருமணி இருக்கும் நான் கோபாலனை மிரட்டினேன். அவன் தனக்கு யாதொன்றும் தெரியாதென்றும், தன்னை மன்னிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். ஒழிந்துபோகட்டு மென்று மன்னித்துவிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட் டேன். மரகதம் எனக்குத் துரோகம் செய்ததால் அவளைக் கொல்வதே சரியென்று நினைத்தேன். அவள் குறிப்பிட்ட இரவில் இன்ன இடத்தில் இருப்பாள் என்று அறிந்து கொண்டு அங்கேபோய் அவளைத் தாக்கினேன். ஆயினும் அவள் அதிர்ஷ்ட வசமாகத் தப்பினாள். நல்லவேளையாக தக்க இடத்தில் அவள் இருப்பதால் சர்வஜாக்கிரதையுடன் அவளைக் கவனித்து வருகிறார்களாம்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஜெயசிங், 'சரி தான். இதுவரை நீ சொன்ன கதை கேட்பதற்கு இனிமை யாகத் தான் இருந்தது. இப்போது நாம் இருவரும் சேர்ந்து என்ன செய்யவேண்டு மென்கிறாய்' என்று வினவ, குப்ப னும், 'நாம் இருவரும் கோபாலன் தம்பதிகள் வீட்டில் எப் படியாவது நுழைந்து அவர்கள் இருவரையும் கொன்று அவர்களுடைய பொருள்களையும் கொள்ளையடித்து விட வேண்டும். அவர்கள் உயிருடன் இருந்தால் நமக்கு என்

றைக்கும் ஆபத்து தான். நீ சிறிதும் பின்வாங்காமல் தைரியமாக இரு. பள்ளக்குடிசையில் நான் செய்த கொலையையும் அவன் அறிவானாதலால் எப்போதும் அவனால் ஆபத்துதான்,' என்றான். பிறகு இருவரும் இரகசியமாகச் ய்றிதுநேரம் தாங்கள் அனுஷ்டிக்க வேண்டிய முறைகளைப்பற்றி யெல்லாம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் அவ்வாறு பேசிய மறுநாள் மாலை சுமார் ஆறு மணிக்கு ஜெயசிங், நடுக் குப்பத்திலுள்ள கோபாலன் தம்பதிகள் வீட்டுக்குள் நுழைந்தான். அவன் யாரையும் கவனியாமல் வாடிய முகத்துடன் மாடிமீது ஏறி ஒரு ஆசனத்தில் அமர்ந்தான். வேலைக்காரன் ஒருவன் அவன் பின்னாலேயே சென்று அவனுக்கு ஏதேனும் வேண்டுமா என்று கேட்க, அவன் சிறிது மதுபானம் கொண்டுவரச் சொன்னான். ஜெயசிங் ஏதோ வருத்தமுள்ளவன் போல் இருந்ததைக்கேட்ட கோபாலன் அவனிடம் சென்று அவன் அவ்வாறு இருப்பதற்குக் காரணமென்னவென்று விசாரித்தான். அதற்கு அவன், 'அதை ஏன் கேட்கிறாய். அந்தப் பாழும் ராட்சஸ குப்பனிடம் அகப்பட்டுக்கொண்டு நான் படுகிற கஷ்டம் தெய்வத்துக்குத் தான் தெரியும். நேற்றுராத்திரி சிறிது தாமதமாகப் போனதற்காக அவன் எவ்வளவு கோபித்துக்கொண்டான் தெரியுமா? அவனுடன் இனி சகவாசம் செய்யாமல் அவனைத் தொலைத்துவிட வேண்டுமென்றும் நினைக்கின்றேன் ஆனால் அதை உன்னிடம் சொல்லவும் எனக்குப் பயமாயிருக்கிறது. ஏனெனின் நீ அவனுடைய அந்தரங்க சினேகிதனல்லவா?' என்று கூறியதற்குக் கோபாலன், 'ஓ, அப்படிச் சொல்லாதே. அவனைக்கண்டு நீ எப்படிப் பயப்படுகிறாயோ அப்படியே நானும் பயப்பட்டுத் தான் வருகிறேன். எனக்கும் அவனைத் தொலைத்துவிட வேண்டுமென்று தான் இருக்கிறது.

நானும் பார்க்கிறேன் அவன் இருபது வருஷங்களாகப் பெரும் தொல்லையாக இருக்கிறான். அவனுடைய அட்டகாசத்துக்கும் காலம் முடிந்துவருகிறது' என்றான். அப்போது ஜெயசிங், 'நீ இவ்வளவு பகிரங்கமாக உன் அபிப்பிராயத்தைச் சொல்வதால் நானும் சில உண்மைகளைச் சொல்லவேண்டியது தான். ராட்சஸகுப்பன் மரகதத்தைக் கொல்லும் உத்தேசத்துடன் தாக்கினன் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவனே என்னிடம் ஒப்புக்கொண்டான். மற்றப்படி அவன் பள்ளக் குடிசையில் செய்த கொலை நம் இருவருக்கும் தெரிந்ததே ஆகையால் அவனைக் காட்டிக் கொடுத்து விடுவோம்' என்றதும் கோபாலன், 'உண்மையில் நீ இவ்வளவு தூரம் செய்யத் துணிந்தால் நான் நாளையதினம் சில உத்தியோகஸ்தர்களிடம் அறிமுகம் செய்து வைக்கிறேன். நீ இதையெல்லாம் அவர்களிடம் கூறு' என்றான். அதற்கு ஜெயசிங்கும் சம்மதித்தான். அவன் அன்று இரவு போய்விட்டால் மறுபடியும் திரும்பி வாாவிட்டால் என்ன செய்வதென்னும் எண்ணத்துடன் அவனை அன்றிரவு முழுதும் அங்கேயே தங்கும்படி கேட்டுக்கொண்டான்.

கோபாலனது கோரிக்கைக்கு இணங்காவிட்டால் அவன் சந்தேகப்படுவானென்று நினைத்து அன்றிரவு அங்கேயே இருப்பதாக ஒப்புக்கொண்டான். மேலுக்கு அவன் கோபாலனுடன் கலந்துகொண்டவன் போல் பேசினனென்றாலும் அந்தரங்கத்தில் அவன் கோபாலனுடைய சங்கதியையெல்லாம் தெரிந்து கொண்டதற்காகச் சந்தோஷப்பட்டான். இரவு அங்கிருக்க ஒப்புக் கொண்டாலும் சுமார் ஒன்பது மணிக்கு வெளியில் சென்று ஒரு சிநேகிதனைச் சந்தித்துவிட்டு வரவேண்டுமென்று கூறிக் கோபாலனுடைய அனுமதியைப் பெற்று வெளியே சென்றான். அவன் நடுக்குப்பத்திற் கடுத்த

ஒரு பாலத்தினடியில் சென்றதும் அங்கு ஜெயசிங்கை எதிர் பார்த்து ஒருவாறு நின்றிருந்தான். அவன் ராட்சஸ குப்பனைத் தவிர்த்து வேறு யாருமில்லை. ஜெயசிங் குப்பனிடம் தான் கோபாலனுடன் பேசிய விஷயங்களை யெல்லாம் சொன்னதுடன் அன்றிரவு அங்கு தங்கப்போவதாகவும், அவன் நடுநிசியில் வந்தால் தாங்கள் யோசித்துள்ள காரியத்தை முடித்துவிடலாமென்றும் கூறினன். குப்பனும் அதற்கு ஒப்பவே ஜெயசிங் மறுபடி கோபாலன் தம்பதிகளுடைய வீட்டுக்குச் சென்று அவர்களுடன் இரவு ஆகாரத்தை அருந்திவிட்டு அவனுக்கென்று விடப்பட்ட அறையில் போய்ப் படுத்தான். கோபாலன் தம்பதிகள் தங்கள் படுக்கையறையில் படுத்தனர். வேலைக்காரர்கள் அவரவர்களுடைய அறையில் படுத்தார்கள். எல்லாரும் தூங்கிவிட்டனர். ஜெயசிங்குக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. அவன் அன்றிரவு நடத்தவேண்டிய காரியமொன்று இருக்கும்போது அவனுக்குத் தூக்கம் வருமா? சுமார் மணி பன்னிரண்டு இருக்கும். மெதுவாக எழுந்தான். யாருக்கும் தெரியாதபடி அவ்வீட்டின் தெருவாயிலுக்குச் சென்று அக் கதவைத் திறந்தான். வெளியில் காத்திருந்த ராட்சஸ குப்பன் உள்ளே நுழைந்தான். பழையபடி கதவைத் தாளிட்டு விட்டார்கள். இருவரும் சேர்ந்து மெதுவாகக் கோபாலன் தம்பதிகள் படுத்திருந்த அறையினிடம் சென்றனர். அது உள்பக்கம் தாளிடப்பட்டிருந்தது, உடனே குப்பன் தன் கையில் தயாராக வைத்திருந்த ஆயுதத்தால் கதவைச் சத்தமின்றி அப்புறப் படுத்தினன். அறையில் நுழைந்து பார்த்ததில் தம்பதிகள் இருவரும் நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். கோபாலனும் ஜெயசிங்கும் சிறிதும் இரக்கமென்பது இல்லாமல் தம்பதிகள் இருவரையும் ஒரு நிமிஷத்தில் கொலைசெய்து விட்டனர். அவர்களுடைய பணப் பெட்டியைத் திறந்து பார்த்ததில் சொற்ப நகைகளும் சிறு

தொகையுமே இருந்தன. ஏமாற்றமடைந்தனர். நிறைய தொகை இருக்குமென்று நினைந்தார்கள். கிடைத்ததைச் சுருட்டிக்கொண்டு அப்பிரேதங்களைப் படுக்கையினடியில் போட்டுவிட்டு அவ்வறையை விட்டுப் புறப்பட்டனர்.

பின்னர் அவர்கள் இருவரும் இனியும் அங்கு இருப்பது ஆபத்தென உணர்ந்ததால் யாரேனும் ஒருவர் முன்னதாகச் செல்வதென்றும், மற்றவர் பின்னல் போவதென்றும் தீர் மானித்தனர். அதன்படி ஜெயசிங் முதலில் போய்விட்டான். அவன் அரை மைலுக்கு அப்பால் சென்று குப்பனுக்காகக் காத்திருந்தான். ராட்சஸகுப்பன், ஜெயசிங் போன அரை மணி நேரத்துக்குப் பின்னர் கோபாலனுடைய வீட்டை விட்டுப் புறப்பட்டதும் அவனை யாரோ சிலர் பின் தொடர்ந்து ஓடோடி வருவதை அறிந்தான். ஆகவே அவன் தன் கையிலிருந்த குண்டாந்தடியால் ஒரு உத்தியோ கஸ்தன் மீது ஓங்கி அறைந்துவிட்டு ஓடலானன். பலரும் அவனைப் பின் தொடர்ந்து ஓடினர்கள். ஆயினும் அவன் வாயுவேக மனோவேகமாக ஓடியதுடன் திடீரென்று அருகி லிருந்த சுவர்மீது ஏறி அப்பாலிருந்த பெரிய ஆற்றில் குதித்து விட்டான். அதைப் பார்த்த உத்தியோகஸ்தர்கள், அவன் கரையேற முடியாதென்றும், இறந்து விடுவானென்றும் நினைத்து அவனைப் பின் தொடராமல் திரும்பி விட்டார்கள். வேலைக்காரர்கள் விழித்தெழுந்ததும் தங்கள் எஜமானனும், எஜமானியும் கொல்லப்பட்டிருப்ப தறிந்து துக்கப்பட்டார் கள். முன் நாள் இரவு அங்கு தங்கிய ஜெயசிங் காணப்படா மையாலும் நடு ராத்திரியில் சில உத்தியோகஸ்தர்கள் ராட் சஸ குப்பனைத் துரத்தினர்கள் என்பதை அறிந்ததாலும், ஜெயசிங்கும் குப்பனும் சேர்ந்தே கொலைத் தொழிலைப் புரிந் திருக்கிறார்கள்' என்று நிச்சயித்தனர்.

இப்போது நாம் பஞ்சநதம் பிரபுவுடன் வெளி நாட்டுக்குச் சென்ற தினகானுடைய நிலைமையைக் கவனிப்போம். அவர்கள் எங்கெங்கேயோ சுற்றிவிட்டுக் கடைசியாகப் பரிதிபுரம் வந்து சேர்ந்தனர். அங்கே அவர்கள் ஒரு ஓட்டலில் தங்கி யிருந்தபோது இரத்தினபுரி வாசிகள் சங்கம் என்று ஒருசங்கம் ஏற்பட்டு அதன் ஆண்டுவிழா நடந்தது. பரிதிபுரத்தில் குடியேறிய இரத்தினபுரி வாசிகள் அதைக் கொண்டாடியதால் அங்கு வந்திருந்த எல்லா இரத்தினபுரி வாசிகளையும் அவ் வைபவத்துக்கு அழைத்தனர். ஆகவே, அதற்கு பஞ்சநதம் பிரபுவும், தினகரம் பிரபுவும் செல்ல வேண்டியதாயிற்று. அவ் வைபவம் கிரௌன் தியேட்டரில் நடைபெற்றது. விருந்துக்கு முன் வழக்கப்படி நடனம் நடைபெற்றது. திரளான ஆண்களும், பெண்களும் கூடியிருந்தனர். அவ் வைபவத்துக்கு புரிதி புரத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி வந்திருந்தாள். அவள் மிக்க ரூபலாவண்ய முடையவளாகவும், பார்ப்போர் மனதைக் கவரும்வண்ணம் வளர்ச்சிபெற்ற அங்கங்களை யுடையவளாகவும் இருந்தாலும், அவ்வளவு அழகுடைய பெண் அக் கூட்டத்தில் வேறு யாரும் இல்லாமல் இருந்தாலும் எல்லாரும் அவளையே உற்று நோக்கினர். ஆனால், அவள் மட்டும் யாருடனும் பேசாமல் தனியாக ஒரு இடத்தில் அமர்ந்திருந்தாள். அவளைக் கண்ட தினகரம் பிரபுவுக்கு அவளிடம் ஏதோ ஒருவிதமான ஆர்வம் ஏற்பட்டு விட்டது. எப்படியாவது அவளைச் சந்தித்துப் பேச வேண்டுமென்று நினைத்தான். ஆகவே அவன் அவளருகில் போய் உட்கார்ந்து அவளுடைய அழகைக்கண்டு மனம் பூரித்தான். அவளைக் காணும் பெண்களே அவளைக் கண்டு பொறாமையடைந்திருப்பார்கள் என்றால் ஆடவரைப்பற்றி அதிலும் மனோ உறுதியில்லாத தினகரனைப் பற்றிக் கேட்க வேண்டியதே யில்லை.

தினகரன் மெதுவாக அப் பெண்மணி உட்கார்ந்திருந்த இடத்துக்கு அருகில் சென்று அவளுக்கு வந்தனம் செலுத்தினன். உடனே அவள், அவன் தன்னுடன் நடிக்க விரும்புகிருனே யாதோ என்று நினைத்து, 'பிரபு, நான் இப்போது நடிப்பதாக உத்தேசமில்லை' என்று கூறிக்கொண்டே பக்கத்து ஆசனத்தில் உட்காரும்படி ஜாடை காண்பித்தாள். அவனும் உட்கார்ந்தானென்ருலும் அவள் விதவையாக இருக்க வேண்டுமென்னும், அவள் தன்னைப் பிரபு என்று அழைத்தது எப்படியென்றும் சிந்தித்தான். இதற்குள் அவள், 'பிரபுவே! நீர் எவ்வளவு காலமாக எங்கள் ஊரில் இருக்கிறீர்' என்று கேட்டாள். அதற்கு அவன், 'ஓ, நீ இரத்தினபுரி மாதாக இருக்கலாமென்றல்லவோ நினைத்தேன். பரிதிபுரவாசியா! நான் இங்கு வந்து ஒரு மாதமாயிற்று. நாளைய தினம் போகலாமென்று இருக்கிறேன். ஆனல்' என்று சொல்வதற்குள் அவள், 'ஆம்; இந்நகரில் பல விசேஷங்கள் இருப்பதால் இவ்வளவு விரைவில் போக முடியாதுதான். நான் இரத்தினபுரியில் பிறந்தவளே. ஆயினும் பரிதிபுர வாசியை மணந்து கொண்டவள். ஆனல் இப்போது என் கணவன் உயிருடன் இல்லை. அவர் இறந்து இரண்டு வருஷங்களாய் விட்டன. எனது கணவர் பரிதிபுர சமஸ்தானத்தில் சேனைத் தலைவராக இருந்தார். அவரது பெயர் உலகநாதம் பிரபு. அவர் என்னைவிட பல ஆண்டுகள் முதியவர்' என்று கூறினள். தினகரன் தான் ஒரு சீமாட்டியுடன் பேசுவதையறிந்து மிகச் சந்தோஷப்பட்டேன். மேலும் அவள், ஷண்பகவல்லி, தனக்குப் பல வகையிலும் இன்பத்தைக் கொடுத்த கமல குமாரி ஆகிய எல்லாரையும் விட அழகானவள் என்பதை உணர்ந்து அவள் தனக்குக் கிடைத்தது பெரும் பாக்கியமே' என்று கருதினன்.

அவன் அவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்தபோது ஜக

தாம்பாள் என்னும் அப் பெண்மணி, 'ஐயா, எனக்குச் சிறிது களைப்பாக இருப்பதால் நான் எனது வீட்டுக்குப் போகப் போகிறேன்' என்றதும் அவளிடம் அளவிலா மோகங் கொண்ட தினகரன், 'நீ வண்டியில் போகப் போகிறாயா? உனக்கு வழி விடுவதற்காக நானும் வரட்டுமா? உன்னுடன் எவ்வளவு நேரம் அதிகமாக இருக்க முடியுமோ அவ்வளவு நேரமும் இருந்து இன்புற வேண்டுமென்னும் ஆவல் அதிக மாக இருக்கிறது' என்றான். அதற்கு அவள், 'நான் எனது வண்டியில்தான் போகப் போகிறேன். நீ வழிவிடுவது மட்டு மல்ல. என் வீட்டுக்கே வந்து என் வீட்டில் ஒருவேளை சாப் பிட்டுவிட்டுப் போகலாம்' என்றாள். அவனும் அதற்குச் சம் மதித்ததால் அவளுடன் அவ் வண்டியில் ஏறிக் கொண்டான். அது விரைவில் நல்லப்ப வாத்தியார் தெருவிலுள்ள அழகிய ஒரு வீட்டின் முன்போய் நின்றது. இருவருமாக இறங்கி அவ் வீட்டில் நுழைந்தார்கள். ஜகதாம்பாளுடன் அவளு டைய வேலைக்காரி ஒருத்தி அவ் வீட்டிலிருந்தாள். அவளைத் தவிர வேறு யாருமில்லை. தினகரன் அவளுடைய வீட்டில் போய்ச் சேர்ந்ததும் மோட்சலோகம் அடைந்தவனே போல் அளவிலா ஆனந்த மடைந்தான். அவள், தான் இதுவரை பார்த்த எல்லாப் பெண்களைவிட அழகானவள் என்றும், ஏதோ நல்ல அந்தஸ்திலேயே உள்ளவள் என்றும் தினகரன் நினைத்தபடியால் அதிர்ஷ்ட வசமாகத் தனக்குக் கிடைத்த அச் சந்தர்ப்பத்தை அவன் உவப்புடன் ஏற்றான். ஜகதாம் பாள் வேறு அறைக்குச் சென்று தன் காரியங்களை முடித்துக் கொண்டு தினகரனிருக்கும் இடத்துக்கு வந்தாள். இருவரும் சாப்பாட்டுக்கு உட்கார்ந்து கொண்டதும் இருவரும் பேசிக் கொண்டார்கள்.

அப்போது அவள், தான் விதவையாய் விட்டதால் பரிதிபுரத்தி லிருக்க விரும்பவில்லை யென்றும், தான் பிறந்த

னாகிய இரத்தினபுரிக்கே செல்ல உத்தேசித் திருப்பதாக வும், அங்கு பற்பல வாலிபர்களும், அவளது அழகை மெச்சி அவளை மனைவியாகவேனும், காமக் கிழத்தியாகவேனும் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும், அவற் றையெல்லாம் அவள் மறுத்து விட்டதாகவும் தினகரனிடம் தெரிவித்தாள். அதற்கு அவன், இரத்தினபுரிக்கு அவள் தனி யாகச் செல்லவேண்டிய அவசியமில்லையென்றும், தான் அவ ளுடன் வந்து அவருக்கு வேண்டிய எல்லாச் சௌகரியங் களையும் ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் தன்னுடைய விருத் தாந்தங்களையும் சொல்லி அவர்கள் இரத்தினபுரிக்கு போய்ச் சேர்ந்ததும் தன்னுடைய மனைவியாக வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான். அவள் முதலில் அதை மறுப்பது போல் பாவனை செய்தாலும் மெதுவாக அவனுக்குத் தன்னி டம் அளவு கடந்த ஆசை உண்டாகும்படி செய்து அவன் தன் வலையில் நன்றாகச் சிக்கிக்கொண்டான் என்று தெரிந்த பின்னரே அதற்குச் சம்மதிப்பவள்போல் ஜாடைகாட்டினாள். அவனும் அவளைக் கட்டித் தழுவிக்கொண்டு ஒரு முத்தமிட்ட பின்னர், மறுநாள் வருவதாகச் சொல்லிவிட்டுப் பஞ்சநதம் பிரபு தங்கியிருந்த ஓட்டலுக்குப் போனான். அன்றிரவு அங்கு படுத்திருந்துவிட்டு விடியற்காலையில் எழுந்து பஞ்சநதம் பிரபு வுக்கும் சொல்லாமல் தன் மூட்டை முடிச்சுகளுடன் ஜக தாம்பாள் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அங்கு போனதும் ஜகதாம்பாளும் அவனை ஆவலுடன் வரவேற்றுக் காலை ஆகா ரத்தையும்கொடுத்தாள். மீண்டும் அவளிடம்போய்ச் சேர்ந்து விட்ட சந்தோஷம் காரணமாக அவன் அவளை ஆர்வத்துடன் அணைத்துக் கொண்டான். பிறகு சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்கள் இரத்தினபுரிக்குப் பிரயாணப்பட்டனர். ஜகதாம் பாள் தன் தோழி ஒருத்தியுடன் புறப்பட்டாள். தினகரம்

பிரபு தனது அந்தரங்க சேவகன் ஒருவனுடன் புறப்பட்டான். ஆக நால்வரும் பிரயாணம் செய்தனர்.

இப்போது நாம் ஜகதாம்பாளைப் பற்றிச் சில சங்கதிகளைக் கூறவேண்டியது அவசியமாகிறது. அவள் தினகரம் பிரபுவைச் சந்தித்த காலத்துக்கு ஐந்து வருஷங்களுக்கு முன்பு அவள் தன் அத்தையுடன் இரத்தின புரியிலிருந்து பரிதிபுரத்துக்கு வந்து ஓரிடத்தில் தங்கினாள். அப்போது அவளுக்கு வயது பத்தொன்பது. அவள் மிக்க அழகானவளாயும், இனிய குணங்களை யுடையவள் போலும் காணப்பட்டபடியாலும், அவள் தாராளமாகச் சமூகத்தில் கலந்து கொண்ட படியாலும் அவளைக் காண நேரிட்ட எல்லா ஆடவர்களும், கலியாணமானவர்களும் சரி, ஆகாதவர்களும் சரி அவளிடம் மோகங்கொண்டு அவளுடன் ஒரு வார்த்தை பேசவாவது சந்தர்ப்பம் கிடைக்குமா என்று மிக ஆவலுடன் எதிர் பார்த்தனர். பலர் அவளுக்குப் பலவிதமான கடிதங்களை எழுதுவதும், எங்கேயாவது தனியாகச் சந்தித்து விட்டால் அவளிடம், தங்களுக்குள்ள ஆசையைத் தெரிவிப்பதுமாக இருந்தும் ஜகதாம்பாள் அவர்கள் எல்லாரையும் அலட்சியம் செய்பவள்போல் துச்சமாகமதித்து தான் எவருடைய யோசனையையும் அங்கீகரிக்க முடியாதெனத் தெரிவித்து வந்தாள். கடைசியில் அவளுக்குக் கமலநாதன் என்பவனிடம் மட்டும் ஒருவிதமான அன்பு ஏற்பட்டது. அவனை அவள் கலியாணம் செய்து கொள்ளலாமாவென்று யோசித்தபோது அவளுடைய அத்தை, உண்மைக் காதலையோ, அன்பையோ கவனியாமல், இவ்வுலக வாழ்க்கையின் இன்பம் அனுபவிப்பதே பெரிதெனக் கருதியதால் அதற்கான செல்வத்தை யுடையவனையே ஜகதாம்பாள் மணக்க வேண்டுமென்று விரும்பியதால் கமலநாதனுடைய நிலைமையைப் பற்றி அந்த

ரங்கமாக விசாரித்தாள். அவன், அப்போது ஏதோ சில சொத்துக்களுக்கு எஜமானனுய் இருந்தா னென்றாலும் அது வழக்கில் இருப்பதாகவும், பெரும்பாலும் அவனுக்கு விரோத மாகத் தீர்ப்பு உண்டாய் விடுமென்றும் தெரிந்து கொண் டாள். ஆதலால் ஜகதாம்பாள் அக் கமலநாதனை விவாகம் செய்து கொள்ளக் கூடாது' என்று சொல்லிவிட்டாள். அத் தையின் வார்த்தையைக் கேட்டு ஜகதாவும் அதற்கு இணங் கினு ளென்றாலும் அவளுக்குக் கமலநாதனிடம் அளவிலாக் காதல் ஏற்பட்டிருந்தது. ஆடவர்கள் தான் பல பெண்களையும் மோகிப்பார்கள். உண்மையில் ஏதோ ஒருவர் இருவரிடம் மட்டும் தான் உண்மையான அன்பு இருக்கும். ஆனல் பெண் களுடைய நிலைமை அப்படியல்ல. அவர்களுக்கு யாரேனும் ஒரு ஆடவனிடம் அன்பு ஏற்பட்டு விட்டால் அதை நீக்கிக் கொள்ள அவர்களால் முடியாது. அவனைக் கடைசிவரை நேசிக்கவே செய்வர். அதுபோலவே ஜகதாவும், தன் அத் தைக்காகவும், உண்மையில் பெருஞ் செல்வமும் வேண்டுமே என்னும் ஆசையாலும் கமலநாதனை மணப்பதில்லை என்று முடிவு செய்தா ளென்றாலும் அவனிடம் அவளுக்கிருந்த அன்பை மட்டும் மறக்க அவளால் முடியவில்லை.

சில வாரங்களுக்குள் ஜகதாவின் அத்தை கேள்விப் பட்டபடியே கமலநாதனுக்கு விரோதமாக வழக்கில் தீர்ப் பாய் விட்டதால் அவன் மிக்க ஏழையாகிப் பின்னர் பரிதி புரத்தில் இருப்பதும் அவமானமென நினைத்து அவ்வூரையே விட்டுப் போய்விட்டான். ஜகதாம்பாள் இனி அவனைச் சந்திப்ப தென்பதும் சந்தேகமாய் விட்டது. ஆகவே, அவள் வேறு யாரையேனும் விவாகம் செய்துகொள்ள வேண்டு மென்று தீர்மானித்தாள். சில தினங்களுக்கெல்லாம் சுமார் இருபது வயதுள்ள அந்த ஜகதாம்பாள் அறுபது வயதான

வனும் பரிதிபுர சர்க்காரில் சேனையில் நீண்டகாலம் வரை உழைத்துப் பெருஞ் செல்வத்தைச் சேர்த்துவைத்துக் கொண்டிருப்பவனுமான உலகநாதம் பிரபுவை மணந்து கொள்ளப் போகிருள் என்னும் செய்தி அங்கெங்கும் பாவியது. வாலிபர்களையும் அலட்சியம் செய்த அவள், கேவலம் அறுபது வயதான அப்பிரபுவை மணந்துகொள்ளப் போகிருள்' என்பதைக் கேட்ட அனைவரும் ஆச்சர்யப்பட்டனர். எனினும் ஜகதா உலகநாதம் பிரபுவைப் பகிரங்கமாக மணந்துகொண்டு தன் அத்தையுடன் அவனது பங்களாவில் போய் வசிக்க ஆரம்பித்தாள். அவன் மிக்கசெல்வமுடையவனுதலால் ஜகதா தன் இஷ்டப்படியெல்லாம் விலையுயர்ந்த ஆடை, ஆபரணங்களையெல்லாம் அணிந்துகொண்டு இன்ப வாழ்க்கையை அனுபவித்தாள். எல்லாச் சௌகரியங்களும் வசதிகளும் இருந்தன. ஆனல் வாலிப மங்கையாகிய அவளுடைய விரக தாபத்தைத் தீர்க்கக்கூடிய சக்தி வயோதிகனுன உலகநாதம் பிரபுவுக்கு இருக்கவில்லை. ஆதலால் அவள் வெளிப்பார்வைக்கு எல்லாவிதமான சுகங்களையும் அனுபவிப்பது போல் காணப்பட்டாலும் அந்தரங்கத்தில் அவள் காமபாணத்தைத் தாங்க முடியாமல் கவலைப்பட்டு வந்தாள். தான் மனமார நேசித்தவனும் இளம் வயதினனும், தன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய ஆற்றல் வாய்ந்தவனுமான கமலநாதன் அப்போது இல்லையே என்று நினைத்து வருந்தினுள். அவன் ஊரில் இருந்து அடிக்கடி அவளைச் சந்தித்திருப்பானுயின் எப்படியாவது தான் மணந்துகொண்டவனை ஏமாற்றியோ, சரிப்படுத்திக்கொண்டோ கமலநாதனுடன் இன்பத்தை அனுபவித்திருப்பாள். இவ்வாறு அவள் இரண்டு வருஷம் காலங் கழித்தாள். அவளுக்கு உலகநாதம் பிரபுவின்மூலம் குழந்தையும் பிறக்கவில்லை. ஆதலால் அவளுக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டது.

ஆகவே அவள் தன் அத்தையுடன் கலந்து ஆலோசனை செய்து மெதுவாக உலகநாதம் பிரபுவைக் கொன்று விடுவதென்னும் முடிவுக்கு வந்தாள். அவள் ஒருநாள் மாலை மிக்க ஏழை மாதைப்போல் வேடம் அணிந்துகொண்டு ரசாயான சாலைக்குச்சென்று ஏதோ வியாதிக்கு மருந்து பக்குவம் செய்யும்பொருட்டு விஷம் வேண்டுமென்று கேட்டு வாங்கி வந்தாள். அதை அவள் வாங்கிவந்த மூன்றாவதுநாள், உலகநாதம் பிரபு படுக்கையறையில் இருந்தபோது திடீரென்று இறந்துவிட்டான் என்னும் செய்தி பரவியது. உடனே போலீஸ் அதிகாரிகளும், டாக்டரும்வந்து சோதித்துப் பார்த்ததில் பிரபு விஷமருந்தியதால் இறந்திருக்க வேண்டுமெனக் கூறினர். ஜகதாம்பாளே விஷமிட்டிருக்க வேண்டுமெனச் சந்தேகப்பட்டதால் அவளைச் சிறைக்கு எடுத்துச் சென்றனர். பின்னர் பிரேத விசாரணை முடிந்ததும் உலகநாதம்பிரபுவின் பிரேதம் முறைப்படி அடக்கம் செய்யப்பட்டது. ஜகதாம்பாள் பணக்காரியாதலால் ஜாமீனில் விடுதலை செய்தார்கள். அவள்மீது கொலைவழக்கு சாட்டப்பட்டு விசாரணையாயிற்று. விசாரணை சுமார் ஆறுமாதம்வரை நடை பெற்றது. ஜகதாவும் பிரபல வக்கீல்களை வைத்து தான் குற்றவாளியல்ல என ருஜூப்படுத்த முயன்றாள். உண்மையிலேயே அவள், உலகநாதரிடம் உண்மையான காதல் இல்லாதவளாக இருந்தாளென்றாலும், அவனிடம் மிக்க மரியாதையுடனும் விசுவாசத்துடனும் நடந்துகொண்டாள். அவன் அவளுக்கு அவ்வளவு செல்வத்தையும் அந்தஸ்தையும் கொடுத்தால் அவனிடம் அவள் மரியாதையாகவே நடந்துகொண்டாள். இதையெல்லாம் நேரில் பார்த்துக்கொண்டிருந்த சேவகர்கள் அவளுக்குச் சாதகமாகச் சாட்சியம் கூறினர்கள். விஷம் வாங்கியவள் அவளே என்று மட்டும் ருஜூவாகியது. வழக்கை விசாரித்த நீதிபதி இதையெல்லாம் ஜூரிகளுக்கு விளக்கிக் காட்டினர்.

ஜூரிகள் கலந்தாலோசிப்பதற்காக ஒரு அறையில் சென்று சிறிதுநேரம் இருந்தபின்னர் ஒவ்வொருவராகக் கோர்ட்டுக்கு வந்தனர். தீர்ப்பு சொல்லப் போகிறார்கள் என்று தெரிந்த அன்று, கோர்ட்டில் பெரும் திரளான கூட்டம் நிரம்பியிருந்தது. ஆதலால் ஜூரிகள் என்ன சொல்லப் போகிறார்களோ என்று மிக்க ஆவலுடன் அனைவரும் எதிர்பார்த்தனர். ஜூரிகள் கோர்ட்டில் வந்ததும் எல்லாருமாகச் சேர்ந்து ஜகதாம்பாள் குற்றவாளியல்ல என்று தீர்ப்புக் கூறிவிட்டனர். நீதிபதியும் அதை ஒப்புக்கொண்டு அப்படியே தீர்ப்பும் சொல்லிவிட்டார். கோர்ட்டில் கூடியிருந்த ஜனங்களனைவரும் கரகோஷம் செய்தார்கள். ஜகதாவும் சந்தோஷத்துடன் வெளியே வந்தாள்.

94-வது அத்தியாயம்

—:():—

தினகரனுடைய விவாகம்

முன் அத்தியாயத்தில் கூறியவை யொன்றும் நமது தினகரனுக்குத் தெரியாது. அவன் ஜகதாளுடைய ஒப்புயர்வற்ற அழகைக்கொண்டு மோகித்தான், எப்படியாவது அவளை விவாகம்செய்து கொள்வதென்று முடிவு செய்தான் அவளும் இரத்தினபுரிக்குப் புறப்பட்டதால் அவனும்புறப்பட்டான். அவளை விவாகம் செய்துகொள்ள அவள் சம்மதித்ததால் இரத்தினபுரிக்குச் சென்றதும் ஒருவருக்கும் தெரிவிக்காமலும் விவாகம் செய்துகொண்டு விடுவது என்று சிந்தித்தான். பிரயாணம் புறப்பட்டவர்கள் சில மணி நேரங்கள்வரை

பிரயாணம் செய்தபின்னர் அன்றுபகல் சுமார் மூன்று மணிக்கு ராயவரம் என்னுமிடத்தில் சிற்றுண்டி அருந்துவதற்காகப் பெரிய ஒட்டல் ஒன்றில் தங்கவே பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அறைகள் ஒன்றில் ஜகதாம்பாளை இறக்கினார்கள். தினகரன் வேறு ஒரு அறையில் தங்கினான். அவன் மாடியிலிருந்த அவ்வறையின் ஜன்னல் வழியாக வெளியே ரஸ்தாவில் பார்த்தபோது நண்பன் சந்திரசேகரம் பிரபு கீழும் மேலுமாக உல்லாச நடைநடந்து கொண்டிருந்ததைக்கண்டு அவன் அங்கு எதற்காக வந்தான் என்று நினைத்து ஆச்சர்யப்பட்டான். அதே சமயத்தில் அவனும் தலையை உயர்த்திப் பார்த்ததில் ஒட்டல் மாளிகையின்மீது தினகரன் இருப்பதையறிந்து ஆச்சர்யமடைந்து அவனைக் கண்டு பேசும்போது மாடியின்மீது ஏறினான். தினகரனும் அவன் மூலம் பலவிஷயங்களை அறிந்து கொள்ளும்பொருட்டு அவனைக் காண விரும்பினான். அவன் தினகரனைக் கண்டதும், 'நண்பா, இனியும் என்னிடம் உனக்கு விரோதபாவம் இருக்காதென்றே நம்புகிறேன். நீ பஞ்சநதம் பிரபுவினுடன் இருக்க வேண்டுமே, எப்படித் தனியாக இங்கு இருக்கிறாய்' என்று வினவினான். அதற்குத் தினகரன் 'நான் அவருடன் இருக்க வேண்டிய வேலை முடிந்துவிட்டது. ஆதலால் நான் தனியாகப் பிரயாணம் புறப்பட்டுவிட்டேன். அவரும் இரத்தினபுரிக்குப் புறப்பட்டு விட்டிருப்பார். அதிருக்கட்டும், என் தாயைப்பற்றியும் சகோதரியைப் பற்றியும் ஏதோ சில விஷயங்களைப் பத்திரிகையில் படித்தேன். ஆதலால் எல்லாவற்றையும் விவரமாகச்சொல்' என்று ஆர்வத்துடன் கேட்டான். சந்திரசேகரம் பிரபுவும் நடந்ததையெல்லாம் சொல்ல ஆரம்பித்து, அவனுடைய தங்கை ராஜேஸ்வரிக்கும் தியாகராஜனுக்கும் விவாகம் செய்யவேண்டுமென்று தீர்மானித்திருந்த சமயத்தில், அவள் அதற்கு முன்னரே ஹேமவதி சீமாட்டி

யிடம் வேலைசெய்த மோகனசுந்தரத்துடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்ததும், விவாகமான பிறகும் கணவனை ஏமாற்றி அக்கள்ளக் காதலனுடனேயே இன்புற நினைத்திருந்ததும் அந்தத் தியாகராஜனாலேயே வெளியாய் விட்டதாகவும், தான் ஹேமவதி சீமாட்டியை மணந்துகொள்ள வேண்டிய சமயத்தில் தன் சிற்றப்பனான மனோகரம் பிரபு திடீரென்று அங்கு வந்து குறுக்கிட்டதாயும், செல்வநாதராக நடித்தவரே மனோகரம் பிரபு என்றும் எல்லா விஷயங்களையும் விவரமாகக் கூறினான். அவன் மேலும் சொல்லத் தொடங்கி, 'என் சிற்றப்பனான மனோகரம் பிரபு எனக்கு மாதவாரி இவ்வளவென்று அலவன்ஸ் கொடுத்து இனியேனும் நான் யோக்கியனாக நடந்து கொள்வேனா என்று பரிசோதிக்கும் பொருட்டு என்னை இப் பிரதேசத்துக்கு அனுப்பி விட்டார். அவர் சமீபத்தில் தான் விவாகம் செய்து கொண்டார். உங்கள் வீட்டில் வேலை செய்தவனும் ராஜேஸ்வரியின் கள்ளக் காதலனுமான அந்த மோகன சுந்தரமும், அவனுடைய சகோதரியான நவநீதமென்னும் இந்திராபாயும், மனோகாருடைய மக்கள். ஆனால், முறைப்படி விவாகம் செய்துகொண்ட மனைவிக்குப் பிறந்தவர்களல்லர். அவர் இரகசியமாகக் காதலித்த ஒரு மாதுக்குப் பிறந்தவர்கள்' என்று அவன் சொன்னதும், தினகரன், 'அது யார், அப்படிப்பட்ட மாது? அம்மாதைத் தான் அவர் மணந்து கொண்டாரோ' என்று கேட்டான்.

அதற்கு சந்திரசேகரன், 'காலஞ்சென்ற சுகானந்தம் பிரபுவின் மனைவியான ரங்கநாயகி சீமாட்டியைத்தான் அவர் காதலித்து அம்மாதரசியின் மூலமாகத்தான் அம் மக்கள் இருவரையும் பெற்றாராம். இப்போது அம்மாதையே அவர் விவாகம் செய்து கொண்டு விட்டார். அதிருக்கட்டும். இப்போது உன் தாயாரும், சகோதரியும் எங்கு இருக்கிறார்கள் என்பது

உனக்கு ஏதேனும் தெரியுமா?' என்று கேட்டான். அதற்குத் தினகரன், 'எனக்கும் நிச்சயமாகத் தெரியாது. அவர்கள் பரிதிபுரத்தில்தான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்,' என்றதும் சந்திரசேகரன், 'பரிதிபுரத்திலதானு அவர்களும் அங்கேயே இருக்கிறார்களென்று தெரிந்திருந்தால் என் சிற்றப்பன் என்னை இங்கே அனுப்பியிருக்கமாட்டார். என்னை எப்படியாவது ஹேமவதி சீமாட்டியிடமிருந்து பிரித்துவிட வேண்டுமென்பதே அவரது அபிப்பிராயம். அதிருக்கட்டும்; இப்போது நீ எங்கே போகிறாய்? என்னுடன் சில நாட்கள் இங்கேயே இருக்கக் கூடாதா?' என்று கேட்க, தினகரன், 'இல்லை, தங்க முடியாது. உண்மையைச் சொல்கிறேன் கேள். நான் ஒரு பெண்மணியுடன் சேர்ந்து பிரயாணம் செய்து கொண்டிருக்கிறேன். அவளைப் போல் அழகுடையவள் இவ்வுலகத்திலேயே இல்லை என்று கூறி விடுவது மிகையாகாது. அவளுக்குப் பெற்றோர்களோ, அல்லது அவள் விஷயத்தில் தலையிடக் கூடிய வேறு எவரேனுமோ இல்லை. அவள் விதவையாகவும், சிறிது சொத்துடையவளாகவும் இருக்கிறாள். அவள் அவளுடைய வேலைக்காரியுடனும், நான் எனது வேலைக்காரனுடனும் செல்வதால் யாரும் எவ்வித புகாரும் செய்ய முடியாது. ஆனால் நாங்கள் இருவரும் பரஸ்பரம் உண்மையில் நேசிக்கிறோம். நான் இரத்தினபுரிக்குப் போய்ச் சேர்ந்த பிறகு அவளைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன். அவளது பெயர் 'ஜகதாம்பாள்' என்று கூறினான். தினகரன் சொன்னதையெல்லாம் கேட்டுச் சந்திரசேகரன் ஆச்சர்யமடைந்தான்.

அச் சமயத்தில் ஓட்டல் வேலைக்காரன் ஒருவன் வந்து தினகரம் பிரபுவினிடம் ஆகாரம் பரிமாறப்பட்டிருப்பதாகவும், ஜகதா காத்திருப்பதாகவும் தெரிவித்தான். உடனே

தினகரனும் சந்திரசேகரத்தினிடம் விடை பெற்றுக்கொண்டு அவ் வறையினின்றும் புறப்பட்டு சாப்பாட்டு அறைக்குச் சென்றான். சிறிது நேரத்துக்கெல்லாம் தினகரனும், ஒரு பெண்மணியும் ஒரு வண்டியில் ஏறுவதைச் சந்திர சேகரன் பார்த்தான். வண்டியும், புறப்பட்டுச் சென்று விட்டது. அப் போது மணி நான்கு இருக்கும். சந்திரசேகரம் பிரபு சாப்பிட வில்லை. அவன் ஏதோ மனக் கவலையுடன் இருப்பவன்போல் காணப்பட்டான். அவன் பொழுது போக்கும் பொருட்டு அவ்வூரைச் சுற்றி வரலாமென நினைத்து ஓட்டலி லிருந்து புறப்பட முயன்றபோது ஒரு வண்டி அதி வேகமாக வந்து அதே ஓட்டலின் முன் நின்றதையும், அதில் இரு மாதர்கள் இருப்பதையும் கண்டு, அம் மாதர்கள் யார் என அறியும் பொருட்டுச் சிறிது கூர்மையாகப் பார்த்தான். அவர்கள் ஹேமவதி சீமாட்டியாகவும், ராஜேஸ்வரியாகவும் இருப்ப தைக் கண்டு அளவிலா ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந் தான். ஆனால் அம்மாதர்கள் அவனைக் கவனியாததால் அவர் கள் தங்கள் மூட்டை முடிச்சுகளுடன் உள்ளே சென்று, பிரத்யேக அறையில் தங்கினார்கள். சந்திரசேகரனும் அவர் களைப் பாராதவன்போல் போய்விடலாமென்று நினைத்து இரண்டடி எடுத்து வைத்தான். ஆனால் நடப்பதற்கு மனம் வருமா! ஹேமவதியைக் கண்ட மாத்திரத்தில் அவளுடன் கூடி அவன் அனுபவித்த இன்பங்களெல்லாம் ஞாபகத்துக்கு வந்திருக்காதா? மீண்டும் சமயம் கிடைத்ததால் அவ்வாறே இன்பம் அனுபவிக்க வேண்டுமென்று ஆசை தோன்றி யிராதா ? ஆகவே அவன் வெளியே போகாமல் மறுபடியும் ஓட்டலில் சென்று ஒரு சேவகனிடம், தன் பெயரும், விலாச மும் அடங்கிய விசிட்டிங் கார்டு ஒன்றைக் கொடுத்து அதை பிரத்யேக அறையில் தங்கியிருக்கும் இரு மாதர்களில் மூத்த வளிடம் கொடுக்கும்படி கூறினான். அச் சேவகனும் அவ்

வாறே அக் கார்டைக் கொண்டுபோய் ஹேமவதி சீமாட்டியிடம் கொடுத்தான். சந்திரசேகரன் வந்திருக்கிறன் என்பதை அறிந்த ராஜேஸ்வரி அவனைக் காண வெட்கப்பட்டுக் கொண்டு வேறொரு அறைக்குச் சென்று விட்டாள். ஹேமவதி சீமாட்டி மட்டும் அங்கேயே இருந்து கொண்டு சந்திரசேகரனை உள்ளே வரும்படி சொல்லி யனுப்பினள். சேவகனும் அவ்வாறே போய்ச் சொன்னதும் அவனும் மிக்க சந்தோஷத்துடன் சீமாட்டியைச் சந்தித்தான்.

ஹேமவதி அவனை வரவேற்ற முறையிலிருந்து அவள் முன்போல் அவ்வளவு தாராளமாகப் பேசத் தயாராக இல்லை யென்றும், அவன் ஏன் சந்திக்க விரும்பினன் என்பதை உடனே சொல்லிவிட்டுப் போய்விட வேண்டுமென்று கூறுபவள் போலவும் காணப்பட்டாள். ஆகவே அவன், 'ஹேமவதி சீமாட்டியே, நான் இங்கு உன்னைச் சந்திக்க விரும்பியது பற்றி நீ ஆச்சர்யப்படலாம். ஆயினும் நான் உன்னைக் காண வேண்டாமென்று நினைத்தாலும் என் மனதை அடக்க என்னல் முடியவில்லை. உன்னைப் பார்த்துத்தான் தீரவேண்டுமென்று என் மனம் தூண்டியது. ஆதலால் வந்தேனே யொழிய இன்னதுதான் குறிப்பாகப் பேச வேண்டுமென்னும் எண்ணத்துடன் நான் இங்கு வரவில்லை. நீ ஏதேனும் யோசனை சொல்வதாயின் அதைக் கேட்க நான் தயாராக இருக்கிறேன்' என்றான். அதற்கு அவள், 'நீ இன்னமும் சிற்றப்பனுக்குப் பயப்படும் ஆசாமியாக இருக்கின்றயா? அல்லது அவரை எதிர்த்துப் போராடும் பொருட்டுத் திட்டம்போட்டு வேலை செய்ய உனக்குத் தைரிய மிருக்கிறதா?' என்று கேட்டாள். அப்போது சந்திரசேகரன், 'நான் சிற்சில சமயங்களில், இவ்வாறு என் சிற்றப்பனிடம் அடிமையாய் விட்டதற்காக அதிகம் கவலைப்படுவதுண்டு. ஆயினும் என்னல்

செய்யக்கூடியது என்ன இருக்கிறது. எனக்கு என்ன சௌகரியங்கள் இருக்கின்றன ?' என்முன். அப்போது சீமாட்டி, மனோகரம் பிரபுவுக்கு விரோதமாகச் சந்திர சேகரனைத் தூண்ட, அதுதான் சமயமென அறிந்து, 'அன்பா! உன் நிலைமையை நிச்சயமாக அறியவில்லை. மனோகரம் பிரபு, ரங்க நாயகிச் சீமாட்டியை விவாகம் செய்துகொண்டு விட்டதால் இனி அவருடைய சொத்து ஒன்றும் உனக்கு வரப்போவ தில்லை. ரங்கநாயகிக்கு நாற்பத்தாறு வயதாகி விட்டதால் இனி அவளுக்குக் குழந்தை பிறவாது என்றும் கருதலாம். ஆயினும் அப்படிப்பட்டவர்களுக்கும் குழந்தை பிறக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஆதலால் நீ ஏதேனும் உபாயத்தை அனுஷ்டித்து மனோகரரைக் கொன்று விட்டால் அவருக்கு சட்ட முறைப்படியான குழந்தைகள் இல்லாமற்போகு மாதலின் நீயே அவருடைய சொத்துக்களையெல்லாம் அடையலாம். இவ்விஷயத்தில் என்னால் இயன்ற உதவிசெய்யக் காத்திருக்கிறேன்' என்று கூறினாள்.

இதைக் கேட்ட சந்திரசேகரன், 'சீமாட்டியே, நீ கூறுவதெல்லாம் உண்மைதான். நான் முன் எச்சரிக்கையுடன் வேலை செய்யா விட்டால் பின்னர் பிச்சைக்காரனுகத் திரிய வேண்டியதுதான். ஆதலால் உன் இஷ்டப்படியே நடக்கத் தயாராகவும், ஜாக்ரதையாகவுமிருக்கிறேன். என்னிடம் அடங்கிக் கிடந்த ஆத்திரத்தை நீ மீண்டும் எழுப்பிவிட்டாய், இனி சும்மா இருக்கமுடியாது' என்முன். இதைக்கேட்ட சீமாட்டி 'ஆம், நான்தான் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டேன். ஆதலால், நானே அதற்கான வழிகளையும் சொல்கிறேன்கேள். கிருஷ்ண கிரியிலுள்ள எனது மாளிகையில் என் படுக்கையறையிலுள்ள

என் மேஜையில் ஸீல்செய்த பாக்கெட்டில் ஒரு சிறுபுட்டியை வைத்திருக்கிறேன். அந்தப் புட்டியில் விஷம் இருக்கிறது. அந்த விஷத்தின் ஒருதுளி நாக்கில் பட்டாலும்போதும். உடனே உயிர் போய்விடும். இதோ இந்த சாவியை எடுத்துக் கொள். மிக ஜாக்கிரதையாக என் மாளிகையில் நுழைந்து அதை எடுத்துக் கொள்ளவும். அதுமட்டும் போதுமா? அதை உபயோகிக்கக் கூடிய ஆள் ஒருவன் உனக்கு வேண்டுமல்லவா? நீ என் சுந்தாவிலாச மாளிகையை அடுத்த மடத்தில் இரவில் நடுநிசியில் போய்ப் பார்த்தால் ஒருஆள் இருப்பான். அவன் பணத்துக்காக எப்படிப்பட்ட கொடிய காரியத்தையும் செய்வான். அவனது பெயர் ராட்சஸகுப்பன். நான் உன்னை அனுப்பியதாகச் சொல்லி அந்த வேலைக்கு அவனை நியமித்துக்கொள்' என்றாள். அதற்குச் சந்திரசேகரன், 'நீ இவ்வளவு தூரம் யோசனை சொன்னதற்காக மிகவும் சந்தோஷம். ஆனால் இதற்குச்செலவு அதிகம் பிடிக்குமே என் சிற்றப்பன் சொற்பதொகை தானே எனக்குக் கொடுக்கிறார். நான் எப்படி இவ்வளவு பெரிய காரியத்தைச் சமாளிப்பது' என்று கேட்டான்.

ஹேமவதி சீமாட்டியும் எப்படியாவது மனோகரம்பிரபுவைப் பழிவாங்க வேண்டுமென்று கருதியதால் அவரைக் கொல்லும் வகையில் தனக்குச் சிறிது செலவானாலும் பாதகமில்லையென நினைத்து அவனுக்குப் பொருளுதவி செய்வதாகவும் ஒப்புக்கொண்டு ஐந்நூறு பவுன்களைக் கொடுத்ததுடன் பின்னால் அவனுக்குக் கடிதம் எழுதித் தன் இருப்பிடத்தை அறிவிப்பதாகவும், அப்போது அவன் தனக்கு எல்லா விவரங்களையும் தெரிவிக்கலாமென்றும் கூறினாள். இதையெல்லாம் கேட்டுக்கொண்ட அவன், 'சரி, நான் போய்விடுகிறேன்.

ஆனால் காதலியே, ஒருமுறை என்னை மார்புறத் தழுவிக் கொள்ளலாகாதா?' என்று கேட்டான். அதற்கு அவள், 'அது முடியாது. பழைய தவறுதல்களை மீண்டும் செய்யவேண்டுமா? உடனே இவ்விடத்தை விட்டுச்சென்று உன் வேலையைக் கவனி' என்று கூறவே அவனும் ஒன்றும் பேசாமல் போய் விட்டான். சீமாட்டியை அவன் விட்டுப் பிரிந்த சிறிது நேரத் துக்கெல்லாம் ஹேமவதியும் ராஜேஸ்வரியும் தங்கள் ஆகாரத் தை முடித்துக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்ட னர். அவர்கள் போய்விட்டபிறகு சந்திரசேகரன், சீமாட்டி யிடம், அவளுடைய குமாரனை தினகரம்பிரபு ஜகதாம்பா ளுடன் இரத்தினபுரிக்குச் செல்லும் விஷயத்தைச் சொல்ல வில்லையே என்று நினைத்தான். ஆனால் தினகரனைப்பற்றி அவனுக்கென்ன கவலை.

இதற்கிடையில் ராயவரத்திலிருந்து புறப்பட்ட தினகரம் பிரபுவும் அவனுக்கு மனைவியாக வாய்க்கப்போகிற ஜகதாம் பாளும் தங்கள் ஆட்களுடன் நாகைக்குப் போய்ச் சேர்ந்தார் கள். அங்கிருந்து அவர்கள் சிறிதுதூரம் கப்பலில் பிரயாணம் செய்து இரத்தினபுரிக்குச் செல்லவேண்டும். ஆகவே அவர் கள் நாகையில் ஒரு ஓட்டலில் தங்கியபோது, தினகரம் தங்கிய அறைக்குப் பக்கத்து அறையில் இருந்த சில ஆடவர்கள் ஜகதாம்பாளை மிக்க ஆவலுடன் பார்த்தனர். அவர்களெல் லாரும் அவளுடைய அழகைக்கண்டுதான் அவளைப் பார்க் கிறார்களென்றும், அப்படிப்பட்ட அழகு வாய்ந்த அவளைத் தான் அடையப்போவது தனது பாக்கியமே என்றும் கருதிச் சந்தோஷப்பட்டான். ஆனால் அவர்கள் சிறிது நேரத்துக்கெல் லாம் எதைப்பற்றியோ மெதுவாகப் பேசிக்கொள்வதை யறிந்து மறைந்திருந்து அவர்கள் பேசுவதை உற்றுக் கேட் டான். அவர்கள் தினகரம் பிரபுவுடன் இருப்பவள் ஜகதாம்

பாளே என்றும், அவள் கொலைக் குற்றத்தில் அகப்பட்டவ ளென்றும், அவள் தன் கணவன் உலகநாதம் பிரபுவைக் கொன்றதற்கு அவள் வேறு எவரையேனும் காதலித்தது தான் காரணமாக இருக்க வேண்டுமென்றும் பலவாறாக அவளைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள். இதையெல்லாம் கேட்ட தினகரன் திடுக்கிட்டான். உடனே சென்று ஜகதாம் பாளையே இதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென நினைத்தான். ஆனல் அவள் திடீரென்று தன்னை விட்டுவிட்டுப் போய்விட் டால் என்ன செய்வதென்று பயந்து அவளை ஒன்றுமே கேட்கவில்லை. ஆயினும் தன்னுடைய வேலைக்காரன், ஜகதா ளின் வேலைக்காரியுடன் தாராளமாகப் பேசுவதால் அவனுக்கு ஏதேனும் தெரிந்திருக்குமென நினைத்து அவனைக் கூப்பிட்டு, 'அப்பா, நீ ஜகதாம்பாளின் வேலைக்காரியுடன் தாராளமாகப் பேசுகிறயே, அவள் தன் எஜமானியைப்பற்றி ஏதேனும் புகார் கூறுகிறளா?' என்று கேட்க அவன், 'இல்லை. அவள் என்னுடன் அதைப்பற்றியெல்லாம் ஒன்றும் பேசுவதில்லை வேண்டுமாயின் நான் குறிப்பாகக் கேட்டுப் பார்க்கின்றேன்' என்று சொல்லிவிட்டான்.

பிறகு தினகரன் அந்த ஓட்டலில் ஜகதாம்பாள் இருந்த அறையில் சென்றன். அவள் பிரயாணத்தால் களைப்படைந்து படுத்திருந்தாள். அவளுடைய அழகிய உருவத்தைக்கண்ட அவன் அவளுடன் ஒன்றும் பேசமுடியாமல் அவளுடைய அழகைக்கண்டு ஆனந்திப்பதிலேயே தன் முழு கவனத்தை யும் செலுத்தி மெதுவாக அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். அவளும் தன் இருகரங்களாலும் அவனை அணைத்துக்கொண்டாள். பிறகு அவர்கள் இருவரும் நீண்ட நேரம்வரை காதல் சம்பந்தமான சம்பாஷணைகளிலும், இனி தாங்கள் நடந்து கொள்ளப்போகும் முறைகளைப்பற்றிப் பேசு

வதிலும் காலங்கழித்தார்கள். பின்னர் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு இரத்தினபுரிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு ஒரு பெரிய ஓட்டலில் ஜகதாம்பாளை இறக்கிவிட்டு அவளுக்கு வேண்டிய சௌகரியங் களுக்கெல்லாம் ஏற்பாடு செய்து விட்டு அவன் மட்டும் தன்னுடைய ஆளுடன் தன் மாளிகைக்குச் சென்றான். மறுநாள் காலை அவன், கோயிலுக்குச் சென்று ஆடம்பர மில்லாமலும், பலருக்கும் தெரியாமலும் ஜகதாம்பாளை விவாகம்செய்துகொண்டு விடுவதென்று முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளையும் செய்தான். பிறகு அவள் ஜகதாம்பாள் தங்கியிருந்த ஓட்டலுக்குச் சென்றான். அங்குச் சென்று அவளிடம், தான் விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்திருப்பதாகச் சொன்னதும் அவள் மிகவும் சந்தோஷமடைந்து அவனை இறுகத் தழுவிக் கொண்டாள். அப்போது அவள் நல்ல உடைகளை அணிந்திருந்ததால் எப்போதையும் விட மிக்க அழகானவள்போல் அச்சமயத்தில் தினகரன் பார்வையில் காணப்பட்டாள். மேலும் தனக்கு விவாகமாகப் போகிறதென்றும், இனி சமூகத்தில் அவள் ஒரு உயர்ந்த அந்தஸ்தை அடைந்து விடலாமென்றும் நினைத்து மனம்பூரித்ததால் அவளது முகம் அன்று மலர்ந்த தாமரையைப்போல் அழகாகக் காணப்பட்டது. அவர்கள் இருவரும் கோயிலுக்குப் புறப்படுவதற்கு முன் ஒரு முறை மனமாரத் தழுவிக் கொண்டனர். பிறகு ஜகதாம்பாள் தன் வேலைக்காரியுடன் புறப்படவே மூவருமாக ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு விவாகம் நடக்க வேண்டிய கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

தினகரம் பிரபுவுக்கோ மனதில் திகில் அதிகம். தன்னுடைய கார்டியன்களாகிய பஞ்சநதம் பிரபுவும் மனமோகனரும் சேர்ந்து இவ் விவாகத்தைத் தடுத்து விட்டால் என்ன செய்வதென்னும் பயமே அவனை அதிகமாக வாட்டியது.

எப்படியாவது இச்சங்கதி தன் தாயாருக்குத் தெரிந்து அவள் வந்து விட்டால் என்ன செய்வதென்றும் பயந்தான். ஆகவே அவன் அதை இரகசியமாகவும், விரைவிலும் முடிக்கவேண்டுமென்று புரோகிதரிடம் கூறி யிருந்தான். அப்படியே விவாகம் விரைவில் முடிந்து விட்டது. அந்த விவாகம் சட்டப்படி ரிஜிஸ்தரிலும் பதிவு செய்யப்பட்டு அவனிடம் ரசீதும் அளிக்கப்பட்டது. சாதாரணமாக இருந்த ஜகதாம்பாள் இப்போது கிருஷ்ணகிரி ஜமீன்தாரணி ஜகதாம்பாள் சீமாட்டி ஆகிவிட்டாள். ஆ! அவள் அடைந்த சந்தோஷத்துக்கு அளவே இல்லை. வயோதிகனுகிய தன் கணவனைக் கொன்று விட்ட பின்னரும் தக்க இளைஞனும், ஜமீன்தாருமாகிய ஒருவன் தனக்குக் கணவனுக அமைந்ததுப் பற்றி அவள் களிப்படைந்தாள். கிருஷ்ணகிரி ஜமீன்தாரணியாகிய ஹேமவதி சீமாட்டிக்கு இச் சங்கதிகள் ஒன்றுமே தெரியாது. அவள் வேறு தேசத்தில் அலைந்து கொண்டிருக்கிறுள். விவாகம் முடிந்து விட்டதால் எல்லாரும் தினகரனுடைய மாளிகைக்குப் புறப்பட்டனர். தினகரன் தன் மனைவியாகிய ஜகதாம்பாள் சீமாட்டியுடன் இன்பமாக வாழ ஆரம்பித்தான். ஆனுல் விவாகம் நடந்த தினத்தன்று மாலை அவன் தன் சேவகனுடன் தனியாகப் பேசியதிலிருந்து ஜகதாம்பாள், அவளுடைய கணவனுகிய உலகநாதம்பிரபுவைக் கொன்றுவிட்டு அதனுல் கொலை வழக்கு ஏற்பட்டுக் கோர்ட்டில் விசாரிக்கப் பட்டவள் என்றும், இறுதியில் அவள்மீது குற்றமில்லையென விடுதலை செய்யப்பட்டவள் என்றும் அறிந்துகொண்டான். அயினும் அவளிடம் அவனுக்கு இருந்த மோகத்தால் அதையெல்லாம் குற்றமாகக் கருத அவனுல் முடியவில்லை. ஆகவே அவன், அவளையே உத்தமியாக ஏற்றுக்கொண்டு அவளுடன் சரசசல்லாபம் செய்வதையே மோட்சமாகக் கருதிவரலானுன்.

95-வது அத்தியாயம்.

ராட்சஸ குப்பன் கதி

இரத்தினபுரியிலிருந்து சுமார் ஐம்பதுமைல் தூரத்திலுள்ள மனோரம்யமான, சுகாதாரம் மிக்க ஒரு ஊரில் ஒரு அழகிய பங்களாவும், அதைச்சுற்றிப் பிரம்மாண்டமான பூஸ்திதிகளும் இருந்தன. அவையனைத்தும் மனோகரம்பிரபுவுக்குச் சொந்தமானவை. அந்த இடத்தில் வசிப்பதென்றாலும் இரத்தினபுரியைப் போன்ற பெரிய நகரங்களில் வசிப்பதே போன்று எல்லாவிதமான சௌகரியங்களுடனும் வசிக்கமுடியும், அவ்வளவு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அந்த இடத்தில் தான் சில தினங்களாக மனோகரம் பிரபு தனது மனைவியாகிய ரங்கநாயகிச் சீமாட்டியுடனும், தன் மக்களாகிய மோகனசுந்தரம் நவநீதத்துடனும் வசித்து வருகிறார். மேலும் அவர்களுடன் ரங்கநாயகிக்கு முதல்கணவனை சுகானந்தம் பிரபுவின் மூலம் பிறந்து மைத்துனனாகிய தர்மலிங்கம் பிரபுவால் ஹிம்சிக்கப்பட்ட சபாபதியும் அவர்களுடன் இருந்தான். ஆனால் அவன் அப்போது வெறும் சபாபதியாக இல்லை. மனோகரம் பிரபுவின் முயற்சியினால் அவன் சொத்து சுதந்தரங்களை யெல்லாம் அடைந்து விட்டிருந்தபடியால் சபாபதிப் பிரபுவாகவும், பெரிய பணக்காரனாகவும் இருந்தான். தர்மலிங்கமும் எவ்விதத்திலும் எதிர்க்காமல் தலைதப்பியதே தம்பிரான் புண்ணியம் எனச் சொல்லி அவன் கிடைத்ததைக்கொண்டு திருப்தியுடன் வெளிதேசம் போய்விட்டான். சபாபதிப் பிரபுவுக்கோ சிறந்த குணதிசயங்களை யுடையவரான கோகிலத்தின்மீது ஏற்பட்ட

காதல் சிறிதும் குறையாமல் அவளிடம் அதிக அபிமானத்துடன் இருந்தான். அவர்களிருவருக்கும் விரைவில் கலியாணம் முடிப்பதென்றும் ஏற்பாடாகி இருந்தது. அது போலவே நவநீதம் காதல்கொண்ட நளினரஞ்சன பாபுவை மனேகாரும் சந்தித்து அவனுடைய அழகையும், குணங்களையும், பெருந்தன்மையையும் கண்டு சந்தோஷமடைந்து தன் மகள் நவநீதத்தை அவனுக்கே கொடுப்பதென முடிவுசெய்தார். அந்த விவாகமும் விரைவில் நடத்துவதென ஏற்பாடாகி இருந்தது. இதற்குள் அவன் தன்சுயதேசம் சென்று, தனக்குக் கிடைத்துள்ள ஏராளமான சொத்துக்களையெல்லாம் ஒழுங்குபடுத்திவிட்டு வருவதாகக் கூறிச் சென்றான்.

ஆகவே அவர்களிருவரும் திருப்தியாக இருந்தார்களென்றாலும் சிறிது கவலையுடன் இருந்தவன் மோகனசுந்தரமே. ஏனென்றால் அவனுக்கு மோகனதாஸின் சகோதரியான ராஜலட்சுமியிடம் அளவிலா அன்பு ஏற்பட்டிருந்தது. முன்பு ராஜேஸ்வரியை நேசித்தானென்றாலும் அவளிடமும் அவ்வளவு பற்று ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் ராஜலட்சுமியிடமோ அவனுக்குப் பற்று அதிகம். ஒரு நிமிஷமும் அவளை விட்டுப்பிரிய மனமில்லை. இந்த நிலைமையில் அவன் அவளை இரத்தினபுரியில் விட்டுவிட்டு இங்குவந்து இருப்பதென்றால் சிறிது கவலையுடனேயே இருந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் காலை மோகனசுந்தரம் அம்மாளிகையை அடுத்த நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது அவனுடைய தந்தை மனேகார் அங்கே வந்து அவனிடம், 'குழந்தாய்! உன்னிடம் நான் சில அந்தரங்க விஷயங்களைப் பேசவேண்டியிருக்கிறது' என்றார். அவர் திடீரென்று அவ்வாறு சொன்னதைக் கேட்ட அவன், தன்

தந்தை சதா தன்னுடைய மனதில் புகுந்து தன்னை வாட்டி வரும் காதல் விஷயமாகத்தான் எதையோ பேசப்போகிறார் என்பதை உணர்ந்து சிறிது திருப்தி யடைந்தவன் போல் ஒன்றும் பேசாமல் அடக்கத்துடனும் மரியாதையுடனும் அவர் எதிரில் நின்றான். அப்போது அவர், 'அப்பா! நீ ஏன் அவ்வளவு சந்தோஷமாக இல்லை. ஏதோ கவலைப்படுகிறவன் போல் காணப்படுகிறாயே. இரத்தினபுரியில் இருக்கும் போதுமட்டும் சந்தோஷமாக இருக்கிறாயே. உன்னிடத்தில் நான் அதிக அபிமானமுடையவனாதலால் உன் மனதிலுள்ளதை என்னிடம் சொல்' என்று கேட்டார். மோகனம் ஒன்றும் பேசவேயில்லை. அவன் உண்மையைச் சொல்லி விட வேண்டுமென்று நினைத்தான். ஆயினும் அவனால் வாயெடுத்துப் பேசமுடியவில்லை.

ஆகவே மனேஜரே மீண்டும் பேச ஆரம்பித்து, 'நீ ஒன்றும் பேசாமல் இருப்பதால் எல்லாவற்றையும் நானாகவே யூகிக்க வேண்டியதாக இருக்கிறது. நீ மோகனதாஸின் சகோதரியாகிய ராஜலட்சுமியுடன் இருக்கும்போது மட்டும் சந்தோஷமாக இருக்கிறாய் என்பதை நான் கவனித்திருக்கிறேன்' என்றார். அப்போது மோகனசுந்தரம் வெட்கத்துடன், 'ஐயா, நான் உண்மையிலேயே ராஜலட்சுமியை நேசிக்கிறேன். ஆனால் அதைத் தாங்கள் அறிந்தால் என்னைக் கேவலமாக நினைக்கமாட்டீர்களா? நான் பல பெண்களையும் மோகிப்பவன் என்று நீங்கள் கூறிவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சுகிறேன்' என்று கூறியதும் அப்பெரியார், 'அப்படி யொன்றுமில்லை. ராஜலட்சுமியைப் போன்ற உத்தமியை நேசித்தாலும் குற்றம் சொல்வார்களா? அவள் எல்லா விதத்திலும் உனக்கு ஏற்ற கன்னிகையாயிற்றே இப்போது அவள் சமாசாரம் பேசியதும் உன் முகத்தில்

சந்தோஷக்குறி தாண்டவமாடுகிறது. நான் உன் இரகசியத்தை அறிந்து கொண்டுவிட்டேன். ஆனால் அவளிடம் உனக்கு உண்மை அன்பு இருக்கிறதா என்று சோதிக்க விரும்பினேன். அதில் நீ வெற்றி பெற்று விட்டாய். சதா சர்வகாலமும் அவளது ஞாபகமாகவே இருக்கிறாய். ஆகையால் இனி நீ கவலைப்படாதே. அவளை அடைந்ததாகவே நினைத்துக்கொண்டு சந்தோஷமாக இரு' என்று சொல்லித் தேற்றினார். இதனால் அவன் அதிக சந்தோஷமடைந்தான்.

மனோகரர் தன் குமாரனுடன் பேசிவிட்டு மாளிகையின் வாயிலில் சென்றபோது கிருஷ்ணகிரியிலிருந்து தியாகராஜன் வந்திருப்பதாக அறிந்து அவனைச் சந்திக்கச் சென்றார். அவர் தியாகராஜனை மரியாதையுடன் வரவேற்றுத் தமது மனைவியிடம் அறிமுகம் செய்துவைக்க விரும்பினார். இதற்கிடையில் தியாகராஜன், தான் இரத்தினபுரிக்கு வந்து ஹேமவதி சீமாட்டியின் மாளிகையில் அவளைப்பற்றி விசாரித்ததாகவும்' அங்கு ஹேமவதிக்குப் பதிலாக மற்றொரு சீமட்டி இருப்பதாகவும், அவள் பெயர் ஜகதாம்பாள் என்றும், அவளை தினகரன் விவாகம் செய்து கொண்டிருப்பதாகத் தெரிந்து கொண்டதாகவும், ஹேமவதி பரிதிபுரத்தில் இருப்பதாகத் தெரிந்து கொண்டதாகவும் கூறினான். அதைக் கேட்ட பெரியார் திடுக்கிட்டு, 'அப்படியா! ஹேமவதி பரிதிபுரத்திலா இருக்கிறாள். நான் சந்திரசேகரனையும் அவ்விடத்துக்கு அனுப்பி யிருக்கிறேன். ஒருகால் அவர்கள் இருவரும் சந்தித்துவிட்டால் என்ன செய்வது? மறுபடியும் ஏதேனும் திட்டம்போட்டு வேலை செய்வார்களே!' என்று சொன்னார்.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்தபோதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஹு பிப்ரவரிமீ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி ரகசியம் 3-ம், 4-ம் 5-ம், 6-ம், 7-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று தற்பொழுது இரத்தினபுரிரகசியம் 8-ம்பாகம் என்றநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாஸாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஆ ஜுலை மீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப் பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபா தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 8-பாகமும் ...	16	2	தினகரசுந்தரி	1	0
			தபால்கோள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	ரத்தினபாய் ...	1	18
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	10
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	2
கனகபூஷணம் 2பாகம் ...	3	8	கமலசேகரன் ...	1	12
இராஜாமணி ...	2	0	பூங்கோதை ...	0	12
ஆனந்தலிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஞானசெல்வாம்பாள்			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.